534

தாரண ௵
சித்திரை - வைகாசி ௴

ஸம்புடம் - 3
ஸஞ்சிகை - 5

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

ப்ரசுரிக்குமிடம்:

[illegible] ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை

May, 1944
Vol. 3, No. 5

ரூப[illegible]

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்
1.	ஸங்கல்ப ஸூர்யோதயம்	142
2.	உண்மை வைணவன்	147
3.	ஸத் ஸம்ப்ரதாய தீபம்	153
4.	ஸீதா வியோகத்தின் சீர்மை	156
5.	அம்ருதமும் 40-வது பட்டம் அழகியசிங்கர் குமாரரும்	158
6.	மந்வாதி ஸ்ம்ருதிகளின் அந்தரங்கக் கருத்து	161
7.	செய்திகள்	165
8.	ஸம்பாதகரின் குறிப்புகள்	167
9.	உபநிஷத் பகுதி	165

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும். காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதி யனுப்புதல் நலமாகும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜூக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாசமும் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.

6 JUN 1944
DRAS



ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 3	தாரண ௵ சித்திரை - வைகாசி ௴	ஸஞ்சிகை 5

“அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||”

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீ ந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ர தாரகம் ||
ந்ருஸிம்ஹபக்த பக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த ‘‘ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா’’ என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்களுள்ளவரையில் அவைகளைப் போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த ‘‘ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா’’ என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ. ஸங்கல்ப ஸூர்யோதயம்

[4-ஆம் அங்கம்]

[ஸ்ரீ உப. அன்பில் வி. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A.B.L,]
அட்வோகேட், திருச்சி]

[ஸம்புடம் 3, ஸஞ்சிகை 3, பக்கம் 89-ன் தொடர்ச்சி]

காமன் :—தோழா! உலக ப்ரஸித்தமான உன் வைபவத்தையும் பார்.

"प्रख्यातस्त्वयि संभवः सुमनसां विश्वं त्वयानन्द्यते
मुख्यस्त्वं किल षड्विधेषु ऋतुषु ज्योतिस्त्वदेकाश्रयम् ।
यत्र श्रीर्धूतपङ्कजा स च परस्त्वत्संश्रयो माधवः
कामस्ते सचिवः क एव भविता कालोत्तमस्त्वत्समः ॥"

ஸுமநஸ் எனும் புஷ்பங்கள் உன் ஸமயத்தில் புஷ்பிக்கின்றனவென்பது ப்ரஸித்தம். நீ (வஸந்த ருது) வந்ததும், உலகமெல்லாம் மகிழ்கிறது. ஆறு விதமான ருதுக்களிலும் நீயே முதல். ஜ்யோதிஷ்டோமமென்னும் யாகம் உன்னையே ஆஶ்ரயித்தது. எந்த உன் ருதுவில் லக்ஷ்மீதேவி பத்ம ஹஸ்தையாக இருக்கிறாளோ, எந்த உன் ருதுவை மாதவன் (வைசாக மாஸம், லக்ஷ்மீகாந்தன்) ஆஶ்ரயித்தவனோ, யாருக்கு இந்த மந்மதன் தோழனோ, இப்படிப்பட்ட உனக்கு வேறு எந்த உயர்ந்த காலம் ஸமமாகும்? புஷ்பங்கள் போகத்திற்கும் தேவ பூஜைக்கும் வேணும். வஸந்த ருது தோன்றியதும் குயில்கள் பஞ்சம ஸ்வரத்தில் பாடுகின்றன. உலகமே ஆநந்தப்படுகிறது. வஸந்தோத்ஸவம் தேவர்களுக்கும் காமனுக்கும் நடக்கும். ருதுக் கணக்கில் நீதானே முதலில் விரல்விட்டு எண்ணப்படுகிறாய். வர்ஷப் பிறப்பே உன் பிறப்போடு தானே. வர்ஷத்திற்கே முக்யன் நீதானே. '𑌋𑌤𑍂𑌨𑌾𑌂 𑌕𑍁𑌸𑍁𑌮𑌾𑌕𑌰𑌃' [ருதுக்களில் வஸந்தன் நான்] என்றல்லவோ கீதைப் பாட்டு? '𑌵𑌸𑌨𑍍𑌤𑍇 𑌵𑌸𑌨𑍍𑌤𑍇 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌾 𑌯𑌜𑍇𑌤' ஜ்யோதிஷ்டோம யாகத்தைச் சுருக்கமாக 'ஜ்யோதிஸ்' என்று சொல்வர். 'அந்த ஜ்யோதிர் யாகம் ஒவ்வொரு வஸந்தத்திலும் பண்ணவேணும்; மற்ற மாஸங்களில் ஜ்யோதிஸ் ஏது?' என்று ரஸம்.

பத்ம ஹஸ்தையாகப் பகவானை லக்ஷ்மீதேவி ஸேவிப்பாள். தாமரைப்பூ உன் காலத்தில் புஷ்பிக்கிறது. 'பத்மை பத்ம ஹஸ்தையாவது உன்னால்தான்' என்று ரஸம். '𑌮𑌾𑌧𑌵𑌃' என்று வைஶாக மாஸத்திற்கும் ஸ்ரீகாந்தனுக்கும் பெயர். வஸந்தத்தை ஆஶ்ரயித்ததுத்

தானே மாதவ மாஸம். ‘மாதவனும் உன்னை ஆஶ்ரயித்தவன்’ என்று ரஸம். இத்தனையும் பெரிதல்ல. இதற்கு மேலும் ஒன்றுண்டு. நான் உன் தோழன். இனி எந்தக் காலோத்தமன் உனக்கு நிகராவன்? புருஷோத்தமன் ‘வஸந்த காலம் நான்’ என்கிறான். புருஷோத்தமன் ‘வஸந்தன் நானே’ என்று கொண்டாடும் உனக்கு எந்தக் காலோத்தமன் நிகராவா னென்று ரஸம். அர்ச்சிராதி கதியில் உத்தராயண ஷண்மாஸங்களில் வஸந்தனும் சேர்ந்தவன். முதல் அங்கத்தில் வஸந்தனே இதை ஏகாந்தமாய்த் தன் மனத்திற்குள் சொல்லிக்கொள்ளுகிறான். அவஶ்யமாகக் காமன் ஶ்லோகத்தில் அதுவும் அமைகிறது. ஸுமனஸ்ஸுக்கள் ப்ரஹ்ம வித்துக்கள். அவர்களுடைய ப்ரஹ்மாபிஸம்பவம் வஸந்தன் ஸஹகாரத்தால் கிடைக்கிறது. அவன் மோக்ஷ மார்க்கத்தில் ஆதிவாஹகருக்குள் ஒருத்தராய் ப்ரம்ஹாநந்தத்தைச் சேர்ப்பிக்கிறான். ‘ஷண்மாஸா உத்தராயணம்’ என்பதில் வஸந்த மாதங்கள் இரண்டும் முதல். ஜ்யோதி யென்னும் ப்ரஹ்மம் வஸந்தனுடைய ஸஹாயத்தால் தான் அடையப்படும்.

“वसन्तस्त्वं वह्निर्मलयपवनः सारथिरसा-
वशोकादिर्ज्वाला मधुकरगणो धूमपटली ।
सुधासूतिः स्नेहस्तदिह जितनिर्वाणवचसो
विरक्तिस्ते दाह्यं द्रुहिणगिरिशादेरपि सतः ॥”

வஸந்தனாகிய நீயே நெருப்பு. இதோ குளிர்ந்து வீசுகிற இந்தத் தென்றல், அக்நியாகிய உனக்கு ஸாரதி; அஶோகம் முதலிய சிவந்த புஷ்பங்கள் நெருப்பு ஜ்வாலைகள்; கரும் வண்டுகளின் கூட்டங்கள் கரும் புகைச் சுழல்கள்; சந்த்ரன் எண்ணெய். நிர்வாணம் (அணைந்து போவது) என்கிற பேச்சுக்கே இடம் வைக்காத (மோக்ஷ நிர்வாணம் என்னும் பேச்சே கிளம்பாமலடக்கும்) உனக்குக் கொளுத்தவேண்டிய பொருள் ப்ருஹ்மா ருத்ரர் முதலிய ஸாதுக்களின் விரக்தி. ராமாயணம் கிஷ்கிந்தா காண்டம் முதல் ஸர்க்கத்தில் பம்பா ஸரஸ்ஸின் காட்சியைக் கண்டு ராமன் ஸீதா ஶோகத்தால் புலம்புகையில்,

“அஶோகஸ்தபகாங்காரஃ ஷட்பதஸ்வநநிஸ்வநஃ |
மாம் ஹி பல்லவதாம்ரார்சிர்வஸந்தாக்நிஃ ப்ரதக்ஷ்யதி ||”

என்று கூறிய ஶ்லோகம் இங்கே ஸ்வாமி திருவுள்ளத்தில் உள்ளது. வஸந்தனுடைய வலிமையை ராமன் அங்கே ஒப்புக்கொண்டு, வஸந்தன் அக்நி யென்றும், அஶோகப் பூங்கொத்துகள் நெருப்புத் தணல்க ளென்றும், செந்தளிர்கள் நெருப்பு ஜ்வாலைக ளென்றும், வண்டுகளின் ரீங்காரங்கள் படபட வென்று நெருப்பு எரியும் சப்தங்க ளென்றும் வர்ணித்தார். இந்த ஶ்லோகத்தில் வஸந்தன் அக்நி. அக்நியைப் பவநஸாரதி யென்பர்.

"𑌏𑌷 𑌪𑍁𑌷𑍍𑌪𑌵𑌹𑍋 𑌵𑌾𑌯𑍁𑌃 𑌸𑍁𑌖𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑍋 𑌹𑌿𑌮𑌾𑌵𑌹𑌃 ।
𑌤𑌾𑌂 𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌤𑌃 𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌂 𑌪𑌾𑌵𑌕 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑍋 𑌮𑌮 ॥"

[ஸீதையே சிந்தையா யிருக்கு மெனக்குப் புஷ்ப தூளிகளையும் பனித் திவலைகளையும் சுமந்து ஸுக ஸ்பர்ஶமாய் வீசும் இத்தக்ஷிண மாருதம் நெருப்பைப்போல் இருக்கிறது] என்று கிஷ்கிந்தா காண்ட வர்ணநம். 'க்ஷளஸ' என்று இங்கே ஶ்லோகத்தில், இந்த ஸமயத்தில் தங்கள்பேரில் ஸுகமாய் வீசும் தென்றலைச் சுட்டிக் காட்டுவதால், 'ஏஷ:' என்று ராமன் காற்றைக் காட்டிக் காட்டிப் பேசிய ஶ்லோகத்தை நினைப்பூட்டுகிறார். அஶோகத்திற்கு அஶோகமென்று விபரீதப் பெயர்.

"𑌕𑌾𑌮𑌿𑌨𑌾𑌮𑌯𑌮𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑌶𑍋𑌕𑌃 𑌶𑍋𑌕𑌵𑌰𑍍𑌧𑌨𑌃"

[என் போன்ற காமிகளுக்கு அஶோகம் அத்யந்த சோகத்தைப் பெருக்குவது] துக்க ஸாகரத்தில் மூழ்கித் துக்கத்தின் கரை தெரியாமல் ஸீதை வருந்திய வநத்திற்கு அஶோக வநமென்று பெயர். ஸீதையின் ஶோகாக்நி மண்டியெரிந்தவநம் அது. 'அஶோகத்தின் பூங்கொத்துகள் நெருப்பு ஜ்வாலைகள்போல் என்னை விரட்டுகின்றன' என்று ராமன் கருத்தை இங்கே ஸ்வாமி வ்யஞ்ஜநம் செய்கிறார். 'ஜ்வாலா' என்பதால், ராமாயணத்தில் கூறிய பல்லவ ஜ்வாலையை க்ரஹிக்கவேணும். சிவந்த மாந்தளிர்கள் அக்நிக் கொழுந்துகள் போல்வன. கரும் வண்டுக் கூட்டங்கள் பறப்பது கரும்புகைகள் கிளம்புவது போலிருக்கிறது. இங்கே ராத்ரியில் சந்த்ர கிரணங்கள் வீசுகின்றன. சந்த்ரனை, அந்த நெருப்பை மண்டியெரியச்செய்யும் எண்ணெய் எனகிறார். ராமாயணத்தில் பம்பா ஸரஸ்ஸின் வர்ணந காலம் பகல். 'ஜிதநிர்வாணவஹ:' என்பதில் ரஸம் கனத்துள்ளது. 'நிர்வாண' என்பது அக்நி அணைதலையும் ஸம்ஸாரத் தீயின் அணைதலான மோக்ஷ ஸுகத்தையும் சொல்லும். வஸந்தன் உள்ள வரையில் காமாக்நி அணையும் பேச்சே யில்லை; மோக்ஷப் பேச்சு மில்லை. இந்தக் காமாக்நி பக்தி ரஸத்தையும் விரக்தியையும் கொளுத்திவிடும்; ப்ரஹ்ம ருத்ரர்களின் விரக்தியையும் கொளுத்திவிடும். 'ஜ்வாலா' பதத்தால் இந்த்ராதி தேவர்களையும் ருஷிகளையும் கிஷ்கிந்தா காண்டத் தொடக்கத்தில் காம வஸந்தர்களின் ஹிம்ஸையைப் பொறுக்கமாட்டாமல் கதறும் ராமனையும் க்ரஹிக்கலாம்.

வஸந்தன் :—மஹாவீர! ராமனைப் போலவேயோ? அதற்கு மேலோ மஹாவீரன்! என்னை முன்னிட்ட ருதுக்களின் ஸகல புஷ்பாதி ஸம்பத்துக்களும் உனக்காகத் தானே ஏற்பட்டன. உன் அஸ்த்ரங்களைச் செய்துகொடுக்கும் சில்பிகள் ருதுக்கள். சந்த்ரனென்றும் ஸூர்யனென்றும் இரண்டு விஶ்வ ஜ்யோதிஸ்ஸுக்கள் உண்டு. அவர்களுள் சந்த்ரன்

உன் ஜய காலத்தையும் ஸூர்யன் நீ இளைப்பாறி உறங்கும் காலத்தையும் காட்டுவர்.

இப்படி ஒருவரை யொருவர் ஸ்துதி செய்துகொண்டே மேல்மேல் கோடி போவது மந்மதனுக்கே பிடிக்கவில்லை. ‘இது போதும்; ராஜ கார்யத்தைப் பார்ப்போம்’ என்கிறான்.

உத்தீபந விபாவமென்றும் ஆலம்பந விபாவமென்றும், ஶ்ருங்கார ரஸ விபாவங்கள் இருவிதம். நிலவும் தென்றலும் காமத்தை உத்தீபநம் செய்யும் விபாவம். காம பாவத்திற்கு ஆலம்பநம் பெண்மணி.

வஸந்தன் :—ஶ்ருங்காரத்தை மூட்டிவிடும் உத்தீபந விபாவச் சரக்குகள் என் அதீநம். ஆலம்பந ஸம்பத்து உன் அதீநம்.

காமன் :—அப்படியே தோழா! இந்தப் புருஷன் மோக்ஷ மார்க்கத்தில் இறங்க ஆசையுடன் இத்தனை காலமாய் ஸுகமாய் ஸஹஜமாய்க் கண்ணுக்கு இலக்கான ஓர் இனிய பெண்ணழகி உருவத்தை ஶுபாஶ்ரயமாக த்யானித்துத் ததேக சித்தனாய்க் களித்து வந்தவனை, இப்பொழுது ஒருவரும் பார்க்காத ஏதோ சுபாஶ்ரய மெனும் ஒரு ப்ரஹ்ம விக்ரஹத்தை ஓயாமல் விச்சேத மில்லாமல் த்யாநம் செய்யப் பழக்கப் போகிறார்களாம். தேவரோ அஸுரரோ ஸித்தரோ கந்தர்வரோ வித்யாதர கிந்நர கிம்புருஷரோ மநுஷ்யரோ எல்லாரும் ப்ரத்யக்ஷமாய்க் கண்டு களிக்கும் அளவற்ற பெருமையுடைய ‘ஸுஜோவநா’ என்னும் பெயர் வழங்கும் ப்ரஹ்மமே. என்னமோ ஆகாசப் புஷ்பமென்று நினையாதே. தோழா! இது தப்பே அல்ல.

“परमानन्ददायिन्यः प्रजानां सृष्टिहेतवः ।
ब्रह्मलक्षणशालिन्यो न कथं ब्रह्म योषितः ॥”

வேதாந்த ஶாஸ்த்ரகாரர் விசாரிக்கும் சாஸ்த்ர முறையிலேயே இப்பெண்ணரசி ப்ரஹ்மத்தினிடத்தில் அவர்கள் சொல்லும் ப்ரஹ்ம லக்ஷணத்தை நான் ஸமந்வயம் செய்து காட்டுகிறேன். ‘𑌆𑌨𑌨𑍍𑌦𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮’ ‘𑌏𑌷 𑌹𑍍𑌯𑍇𑌵𑌾𑌨𑌨𑍍𑌦𑌯𑌾𑌤𑌿’ ‘𑌪𑌰𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌦𑌾𑌯𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮’ ‘𑌪𑍍𑌰𑌜𑌾𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌹𑍇𑌤𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮’ ‘𑌆𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮’ என்பன அவர்கள் சொல்லும் ப்ரஹ்ம லக்ஷணங்கள். ‘𑌪𑌰𑌮’ என்பதற்கு, ‘தனக்கு மேற்பட்ட தில்லாத ஸர்வோத்தமமான’ என்பது பொருள். 𑌪𑌰𑍋 𑌮𑌾 𑌅𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 ‘இதனிலும் பரம் (மேலானது) மா (இல்லை)’ என்று வ்யுத்பத்தி. ‘𑌆𑌨𑌨𑍍𑌦𑌯𑍇𑌤𑍍’ என்பது பெண்மணிக்கே தகும். வேறு யாருக்குத் தகும்? ஆநந்தப்படுத்துபவளும், வாங் மநஸ்ஸுக்களுக்கு மெட்டாதவளும், வர்ணிக்கவொண்ணாத பரமாநந்தம் தருபவளும் அவள் தானே. ‘ப்ரியமான ஸ்த்ரீயினால் ஆசையுடன் கட்டியணைக்கப்பட்டவன் உள்ளும் புறமு மெல்லாம் மறந்து ஆநந்த பரவச

மாய் மெய்ம்மறந் திருப்பதுபோல்' என்பது உபநிஷத்து வர்ணிக்கும் ரஹஸ்யம். மேலும் அவ்வுபநிஷத், தூக்கத்தில் இம்மாதிரி ப்ரஹ்மத்தால் கட்டி யணைக்கப்படுவதால், சேதநன் உள்ளறிவும் வெளியறிவு மில்லாமல் பரவசமா யுறங்குகிறு னென்கிறது. ப்ரஹ்மம் அணைப்பதற்கு, ஆசை நாயகி ஆசையுடன் அணைப்பதை அது உபமாநமாகக் கூறிற்று. உபமேயத்திலும் உபமாநம் சிறந்ததன்றோ? அது போகட்டும். ப்ரஹ்மத்தின் அணைப்பு ஸுகத்திற்கு ப்ரியகாந்தையின் ஸ்வயம் க்ரஹ ஸுகத்தைத் தானே ஒப்பிட்டது. பரமாநந்தந் தரும் ப்ரஹ்ம லக்ஷணம் அவளுக்கும் பொருந்துவதை உபநிஷத்தும் ஒப்புகிறதே. உபநிஷத்தெனும் பெண் இந்த ரஸத்தை யறிந்து பேசினுள். மேலும் இது லோகாநுபவ ஸித்தம். 'பஹுஸ்யாம் ப்ரஜாயேய' என்று ஸ்ருஷ்டி ஸங்கல்பம் செய்து ப்ரஜைகளை ஸ்ருஷ்டிப்பவள் அவள்தானே. அவள் இல்லாமல் ப்ரஜா ஸ்ருஷ்டி யேது? பதியும் அவளிடமே மறுபடியும் புத்ர ரூபமாய்ப் பிறக்கிறு னென்று நம் பூர்வ பக்ஷிகளே சொல்லுகிறுர்கள். 'ஜாயா' என்று பத்நிக்குப் பெயர். பர்த்தாவே மறுபடியும் அவளிடம் புத்ர ரூபமாய்ப் பிறப்பதால், அவளுக்கு 'ஜாயா' என்று பெயர் என்கிறுர்கள். 'யதஸ்யாம் ஜாயதே புந:' என்பது அவர்கள் ப்ரமாணம். அவர்கள் ப்ரமாணமே நமக்கு வலம். பெண்ணின் கணவன் முன்பு ஒருதரம் தன் தாய் வயிற்றில் பிறந்து மறுபடியும் பத்நி வயிற்றில் பிறக்கிறுனென்பது 'புந:' சப்தத்தின் கருத்து. கணவனுட்பட ப்ரஜைகளைப் பெண் ஸ்ருஷ்டிக்கிறுள். இப்படி ப்ரஹ்மத்தின் லக்ஷணங்களான ஆநந்த மயத்வம், பரமாநந்ததாயித்வம், ப்ரஜா ஸ்ருஷ்டித்வம் முதலிய ப்ரஹ்ம லக்ஷணங்கள் இவளிடம் நன்கு பொருந்துவதால் இவளை ஏன் ப்ரஹ்ம மென்று மதிக்கலாகாது? 'ஜ்யைஷ்ட்யம் வரிஷ்ட்யம் ஸர்வத:' [எல்லாவற்றிலும் அதிசயித மஹிமை யுடையது; எல்லாவற்றிற்கும் அரசாக ப்ரபுவாக இருப்பது] பெண்ணரசியிலும் மிக்க அரசியுண்டோ? 'யோஷித்' என்று ஸ்த்ரீக்குப் பெயர். அந்த ஶப்தத்தை இங்கே ப்ரயோகித்தது மிக்க ரஸம். பெண்ணிற்கு உபாஸ்யத்வத்தை உபநிஷத்து விதிப்பதைக் காட்டவேணும். 'யோஷிதம் அக்நிம் உபாஸீத' [யோஷித்தை அக்நியாக உபாஸிக்கவேணும்] 'யோஷித்வா அக்நி:' [பெண்ணே அக்நி]. அக்நி யென்றது பர ப்ரஹ்மத்தையே சொல்லும். 'ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமிநி:' என்ற ப்ரஹ்ம ஸூத்ரத்தில் அக்நி சப்தம் நேராக ப்ரஹ்மத்தையே சொல்லும். 'அக்ர்யம்' ஸர்வோந்நதமான உயர்பதத்திற்குச் சேர்க்கும் ப்ரஹ்மமென்று அதற்குப் பொருளென்று கூறப்பட்டது. யோஷித்தை (பெண்ணை) ப்ரஹ்மமென்று உபாஸனை செய் என்று வேத விதியின் பொருள் தேறுகிறது.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ வராஹ குரவே நம:

உண்மை வைணவன்

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர் M.A., L.T. வித்வான், திருவையாறு]

[ஸம்புடம் 3: ஸஞ்சிகை 4, பக்கம் 122-ன் தொடர்ச்சி]

பாஷ்யம் ஸ்வாமியின் ஸ்ரீபாஷ்யோபந்யாஸம் ஆரம்பமாயிற்று. முதலில் ஜனங்கள் கொஞ்சம் கூட்டமாய் வந்திருந்தனர். ஸூத்ரத்திலுள்ள பதங்களின் அர்த்தத்தை சாஸ்த்ரோபபலத்தால் ஸாதித்துப் பின் பூர்வபக்ஷிகள் மதத்தை வ்யவஹரித்து, அவர்களது தௌர்ப்பல்யத்தையும் உபபாதித்து, ஸ்ரீமத் ராமாநுஜரது க்ரோடீகாரத்தின் ஸாமஞ்ஜஸ்யத்தையும் விளக்கினார். [இவ்விடத்தில் கதையை உபந்யஸிக்கிற அடியேனுடைய வசந சைலியும் பாஷ்யம் ஸ்வாமியை ஸாதராம் பின்பற்றிவிட்டது.] ஜனங்களுக்கு என்னவோ அதிக ஸ்வாரஸ்யம் ஏற்படவில்லை. ஸ்வாமி மீமாம்ஸா ரீதியாகப் பதார்த்த விசாரம் செய்யப் புக, ஒரு வ்யாபாரமே ஒருமணி நேரமாயிற்று. எதிரில் ஒரு சில வித்வான்களே யிருந்தனர். அவர்களுள் கருணாகரனும் வீற்றிருந்தார். 'டமார் டமார்' என்று புறப்பாட்டு வாத்ய ஒலி கேட்டது. கருணாகரன் முகத்தில் சிறிது உத்ஸாஹபங்கம் காணப்பட்டது. பாஷ்யம் ஸ்வாமி சீற்றத்துடன் "ஏன்? புறப்பாடு என்றால் உடனே கிளம்பிவிட வேண்டுமோ? ஏகாந்தம் ஸமர்ப்பிப்பதிலிருந்து கூட இருப்பதுதான் பகவத் கைங்கர்யம் போலும். ஸ்வாமி! ஒன்று தெரிந்துகொள்ள வேண்டும். நாம் செய்யும் ப்ரமாண விசார பலத்தால் தான் ப்ரமேயமான எம்பெருமானே நிலைத்திருக்கிறான். இந்த ஆஶ்சர்யமான வசநோபந்யாஸங்கள் உமது மனத்தைக் கலக்கி இன்புறுத்த வில்லையா?" என்று கர்ஜித்தார். 'டமார் டமார்' என்ற வாத்ய கோஷம் மீண்டும் கேட்டது. இனிய நாதஸ்வர கானமும் சேர்ந்தது. ஸ்ரீ தேவாதிராஜன் புறப்பட்டுவிட்டார். பாஷ்யம் ஸ்வாமி சொற்பொழிவை நிறுத்தவில்லை. "இந்த இடத்தில் மதாந்தரஸ்தர்களின் நிர்வாஹம் எவ்வளவு பேலவ (துர்ப்பல)மாயிருக்கிறது பாருங்கள்! ...." என்று வாயில் வந்த வார்த்தைகளை உபபலமாக வைத்துக்கொண்டு ஸூத்ர மத்யத்தில், தண்ணீரில் விழுந்தவன் தத்தளிப்பதுபோல் தத்தளிக்கிறார். கருணாகரன் மிகவும் தைர்யத்தைக் காட்டி அஞ்ஜலியுடன் 'க்ஷமிக்கவேண்டும்' என்று புறப்பட்டார். வரதன் வஸந்த மண்டபத்தின் வாயிலில் எழுந்தருளிக்கொண்டிருக்கிறார். யானை வாஹநம். ஸர்வாங்க ஸுந்தரன் எழுந்தருளியிருந்த நிலை ஸ்தலத்திற்குப் பொருத்தமாயிருந்தது. ராஜ வடிவின் அமைப்பும், திருமேனியின் காம்பீர்யமும், மதிவதநமும், கலங்காக் கருணை பொழியும் குளிர்ந்த கண்களும், புன்முறுவல் அறாத திருப்பவளமும், ஆடும்

அணி குழைகளும், ஸர்வ விபவங்களும் ப்ரகாசிக்க ஸர்வாங்க ஸுந்தரனாய் ஸ்ரீவரதன் ஹஸ்திகிரிமேல் ப்ரகாசிக்கும் நிலையை இங்கும் அடைந்தவனாய், ஸரணாகதரான ஜனம் ஒருகோடி முன்னும் பின்னும் தன் திருமுகத்தைக் கண்டு ஆரவாரிக்க, வேதகோஷம் விண்ணைப் பிளக்கப் பவனி புறப்பட்டான்.

கச்சியிற் பவனிகண்டார் காசினியில் மற்றெங்கும்
நச்சியோர் பவனிநாடார் நாரணன் பெருமையீதே.

என்றவாறு காணக் கோடி கண் வேண்டிய அக்கரிய திருமாலைக் கருணாகரன் கண்டார். சிரமேற் கைகுவித்தார்.

'அங்கண்மா ஞாலத் தரச ரபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக் கட்டிற்கீழே
சங்க மிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்'

என்று உதடு துடிக்க மொழிந்தார். 'தேவாதிராஜா ! செய்ய தாமரைக் கண்ணா ! செங்கண் சிறிச்சிறிதே எம்மேல் விழியாவோ? எந்தாய்!' என்று புலம்பினார். கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய்ப் பெருகிற்று. 'என் அத்புதனே ! திங்களும் ஆதித்யனும் போன்ற அங்கண் இரண்டுங் கொண் டெங்கள்மேல் நோக்காயோ?''

பத்திப் பணமகுடப் பாம்பணைமே லெம்பரமர்
அத்திப் பருப்பதமே லயனமரர் தொழநின்றார்
அத்திப் பருப்பதமே லயனமரர் தொழுமாகில்
சுத்திப் பெருங்கடனின் தொல்புகழ்மா சுணாதோ !

என்று புலம்பினார்.

வேத வொலியுடனும் விழா வொலியுடனும் ஸ்ரீ கரிவரதன் விரைந்து செல்லக் கருணாகரனும் வாய் புலற்றியவண்ணம் பின்சென்றார். பாஷ்யம் ஸ்வாமியின் சீற்றத்துக்கு அளவில்லை. 'பாஷண்டி ! மாயாவி ! ஐந்த்ரஜாலிகன்!' என்றெல்லாம் கருணாகரர்க்குச் சாபமாலை தொடுத்தார்.

எம்பெருமான் மறுநாள் விடியற்காலை திருத்தேருக்கு எழுந்தருளி விட்டார். திருத்தேர் நிலைக்கு வரும்வரையில் பெருமாள் புறப்பாட்டுக்கு ப்ரஸக்தி யில்லை. ஜனங்கள் கருணாகரரை ஒரு ப்ரஸங்கம் செய்ய ஏற்பாடு செய்துவிட்டார்கள். மிகவும் கஷ்டத்துடன் அதைக் கைங்கர்ய ரூபமாய் அவர் ஒப்புக்கொண்டார். மத்யாந்ஹம் திருவாராதநத்திலும் அவர் பெருமாளை மிகவும் நொந்து வேண்டிக்கொண்டார். 'மனிதன் பேசிப் பேசி ஆடோபத்தில் பொழுதைப் போக்குகிறானே. மாதவா ! பேச்சில் என்ன இருக்கிறது?' என்பார். 'உதயகிரி யெழுமதியி னெழிலுடைய வுமதுமதி முகமோ' என்று அலறுவார். இரவு எட்டு மணிக்கு ப்ரஸங்கம் ஆரம்பமாயிற்று. "தயையும் தயாநிதியும்" என்பது விஷயம். கருணாகரன் ஸர்வேஸ்வரனுடைய ஸ்வரூப ரூப விபவங்களை நன்கு விவரித்து அவனுடைய அநிதர ஸ்வாஸாதாரணமான பரத்வத்தையும், அதற்கு ஏக

மூலமான ஸ்ரியஃபதித்வத்தையும் நிரூபித்து, அவனுக்கு நிரூபகதர்மமாய் அநிர்வசநீயமான தயையையும் உபபாதித்தார். இந்தத் தயையே அவதார மூலமென்று காட்டினர். காட்டில் குளக்கரையில் ஒரு வேழத்தின் அழைப்பிற்கு ஓடிவந்து, அதனல் தன்னுடைய பரத்வத்தையும் தயையையும் ஸர்வேஸ்வரத்வத்தையும் எம்பெருமான் ஸ்தாபித்துக்கொண்டதை விளக்கினர். அப்போது அவரது குரல் தழதழத்து, நெஞ்சு அடைத்துக் கண் பனிக்க ஆரம்பித்துவிட்டது. இத்துணைப் பெருமையைச் சிறிதும் பாராட்டாது அவன் அடியவருடன் பழகும் ஸௌலப்யத்தை வியந்தார். இந்த ஸௌலப்யம் காரணமாகப் பிறர் தன்னைத் தாழ நினைப்பதையும் மதியாது அவன் பழகுவதை

"मध्ये विरिंचिशिवयोर्विहितावतारः ख्यातोऽसि तत्समतया तदिदं न चित्रं ।
मायावशेन मकरादिशरीरिणं त्वां तानेव पश्यति करीश यदेष लोकः ॥"

என்கிற ஸ்லோகத்தால் ஸுஸ்வரமாய்ப் பாடி விளக்கினர். ஜனங்கள் அதனைக் கேட்டு மனம் உருகிவிட்டனர். கூட்டம் அளவற்றதாயிற்று. எளிய தமிழ் நடையில் உபந்யாஸம். விஷயம் தயை. பாமரர்களும் ஸ்ரீ வரதனது திவ்யகுணத்தில் ஈடுபட்டனர். ஆழ்வார்களது கடலன்ன பக்தியையும், அவர்களது தயையே காரணமாகத் திவ்யப்ரபந்தங்களின் திவ்யாவதாரத்தையும், ஸ்ரீ பரகாலனது உத்க்ருஷ்ட நாயிகாநுபவத்தையும் பேசி இனிமையுடன்,

"தானாக நினையானேல் தன்னினைந்து நைவேற்கோர்
மீனாய கொடிநெடுவேள் வலிசெய்ய மெலிவேனோ
தேன்வாய வரிவண்டே திருவாலி நகராளும்
ஆனாயற் கென்னுறுநோய் அறியச்சென் றுரையாயே"

என்று பாடி ஸர்வேஸ்வரனை ஸ்ரீ தேவப்பெருமானது ஸ்வாராத்யதையையும் பேசி முடித்தார். முடிக்குந் தருணம் ஒரே ஆநந்தாரவாரம். திருத்தேர் 'கடகட'வென்று ஓடிவருகிறது. நல்ல நிலவு. ஆட்கள் கூடித் திருத்தேரை இழுக்க ஆரம்பித்துவிட்டனர். யாவரும் திருத்தேர் ஸமீபம் விரைந்தனர்.

கருணாகரன் பக்கலில் மந்தாகினி வந்தாள். 'ஸ்வாமி! ஒரு வண்டி' என்று அவள் சொல்லுமுன், கருணாகரர், 'வேண்டாம்; இதோ இருக்கிறது நம் அகம். நல்ல சந்த்ரிகை. வேடிக்கையாய்ப் போய்விடலாம். அத்யந்தம் ஸ்ரமமான இடங்களிலன்றி, பகவத்ஸேவைக்கு இந்த மாதிரி ஸௌகர்யங்கள் செய்துகொண்டு போகாமல் இருத்தல் நலம்' என்றார். மந்தாகினி, "ஸ்வாமி! இப்படி ஒரு தெய்வம் கருணாஸாம்ராஜ்யம் செய்து வருகிறது என்று யார் எடுத்துரைக்க வல்லார்? அநேக ஊழிகள் தவம் செய்துங் காணாது தேவர் கலங்கும் தன் திவ்யாத்மஸ்வரூபங்களை மறந்து, இந்தக் குப்பை மானிடவர்க்காகக் கும்ப மாமத களிற்றின் கோட்டில் (ஹஸ்திகிரி) வந்து அவன் எழுந்தருளிய நீர்மையே நீர்மை!

'ஸுஹோ மே ஹ்ருதீ யாதா நிஷ்டுரா ஜநுஸங்கதி:'

என்று அவனை விட்டு எத்தனை பகலும் பழுதுபோய் ஒழிகின்றன. நாட்டுப்புறத்தான் ஒருவன், சில நாட்களுக்கு முன்னர் ஸ்ரீ பெரும்பூதூர் சாலையிற் பாடியவண்ணம் சென்றான். அது என் மனத்தில் என்ன வேலை செய்தது ஸ்வாமி! அந்தக் குடிகாரன் கூற்றில் உயர்ந்த தத்வத்தைக் கண்டேன். என்ன ஆச்சர்யம்!

"ஆனைக் கிரியிருந்து அருளாறு பாயுதரோ!
பானைக்குப் பழவடியீர்! பாரீரோ! பாரீரோ"

என்று பாடிவிட்டு, "வரதா! வரதா! நான் எங்கே நின்னாலும் ஒம் மனு சண்டா—மறந்துபூடாதே" என்றான். மந்தாகினியின் கண்களில் நீர் பெருகியது. "ஸ்வாமி! ஸர்வதேஸ ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸ்ரீ தேவப்பெருமானின் தாஸனென்ற ஸம்பந்த ஞானத்தையன்றோ அவன் பெற்றான். மேலும் அவனையன்றோ 'மறந்துபூடாதே' என்று ஸ்வரூப சிக்ஷை பண்ணுகிறான். ஸ்ரீ வரதனே தம் மதுரத்வனியால் "**अहं स्मरामि मद्भक्तं**" என்று சொல்வதைக் கேட்பதுபோ லிருந்தது. இப்படிச் சேதநாசேதநங்கள் வாய்விட்டு ஸ்ரீவரதன் பெருமையைக் கதறுங்கால், உலகத்தில் நாஸ்திக்யம் தலைதூக்குவதே!" என்றாள். தேர் ஓடும் பேராரவாரம் கடல் ஒலிபோல் எழுந்தது. பறைகள் கறங்கின. பக்தர்கள் ஆரவாரித்தனர். வானில் எழுந்து தனியரசு புரிந்து உலாப் போந்த தண்மதி தன் குளிர்ந்த கிரணங்களை வாரி அள்ளித் தெளித்து நின்றான். விசாலமாய் ஜனச் சந்தடி மேலிட்ட திருவீதிகள். பின் நோக்கினால் ஸ்ரீ ஹஸ்திகிரியின் கோபுரம். கருணாகரன் மனம் குதூஹலித்தது. "மந்தா! ஸ்ரீ தேவராஜனின் லீலையை யாரே வர்ணிப்பர்! ஸங்கல்ப லேசத்தால் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் செய்யவல்ல அவன் பெருமை வார்த்தைக் கடங்குமோ? ஒன்று கேள் அம்மா! சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தத்தாலும் அவனையே கொள்ளவேண்டும். நீ நல்ல புத்திசாலியாயிற்றே. நான் கேட்குங் கேள்விகளுக்குப் பதில் சொல்.

கருணா:—மந்தா! உலகில் ஸ்ரோத்ராநந்தம் எது?

மந்தா:—ஸர்வேஸ்வரனின் திவ்யதேச வர்ணநம்; அவன் நாம ஸங்கீர்த்தநம்; அவனது புறப்பாட்டு வாத்ய கோஷம்.

கருணா:—ரூப ஸுகம் எது?

மந்தா:—[கத்கதத்துடன்] தேருந் திருவீதியும் தடாகமும் கோபுரமும் ஆகிய ஸ்தல அழகும், 'மைவளர்க்கும் மணியுருவம் மரகதமோ மழைமுகிலோ' என்றிருக்கும் அவனது அர்ச்சாவதார வடிவும்.

கருணா:—[குதூஹலமடைந்து] மந்தா! போதும். என்ன ஆஸ்சர்யமான பதில்? நீ ஸ்த்ரீயா யில்லாவிடில் ஜகதாசார்யகம் செய்யத் திறமையுள்ளவள்.

மந்தா:—[அழுதவண்ணம்] ஸ்வாமி! என்ன வார்த்தை சொன்னீர்கள்! நாயினுங் கடையான நான் எந்த வார்த்தையைக் கேட்பது? ப்ரீதிக்கும் தயைக்கும் எல்லை யில்லையா என்ன?" [என்று சொல்லிச்

கொண்டே மண்ணில் விழுந்து வணங்கி] "ஸ்வாமிந்! 'தண்சேறை யெம் பெருமான் தாள் தொழுவார் என் தலைமேலாரே' என்ற நிலையும், 'உற்றதுமுன் னடியார்க் கடிமை' என்ற நிலையும் எனக்கு வாய்த்திட அருள வேண்டும்" என்றாள். எதிரில் ஒரு கார் நின்றது. இருவரும் ஒதுங்கினர். 'மந்தா! மந்தா' என உள்ளிருந்து அவள் பதி கூவினன். மந்தாகினி 'ஸ்வாமி! நான் ஆத்துக்குப் போகிறேன்' என, கருணாகரன் 'சென்றுவா' என்று நகர்ந்தார் மந்தாகினி, தன் பதி உத்ஸவத்திற்காக வந்தாரென்று அகமகிழ்ந்தாள். கார் வீட்டு வாயிலில் நிற்கவில்லை. நேரில் செல்ல ஆரம்பித்தது. 'மந்தா! சென்னைக்குத் திரும்பவேண்டும்' என்றான். மந்தா கெஞ்சிய குரலில் 'இரவில் கொஞ்சம் களைப்பாறிக் காலையில் பார்த்துக்கொள்ளலாம்' என்றாள். காரும் திரும்பி மந்தாகினியின் வீட்டு வாயிலில் நின்றது.

திருவாடிப்பூர தினம். தரையை விளக்கித் தண் மண்டலமிட்டு வீட்டை அழகுறச் செய்தாள் மந்தா. திருமடைப்பள்ளியில் மந்தா உட்கார்ந்துகொண்டு இனிய குரலில் 'தெள்ளியார் பலர் கைதொழும் தேவனார்' என்று பாடிக்கொண்டிருக்கையில் அவள் புருஷன் வரும் சப்தம் கேட்டது. மந்தா எழுந்து எதிர்நின்றாள். 'இரவு நாலைந்து நண்பர்கள் வருவார்கள். ஸுமார் பத்துப் பதினொரு மணிக்குள் நல்ல சாப்பாடு தயாராகட்டும்' என்று சொல்லி மறைந்தான். மந்தா ஒன்றும் சொல்லவில்லை. அவன் கையில் பாதி பிடித்துத் தீயுடன் புகையும் ஒரு சிகரெட்டைக் கண்டாள். அவள் மனம் குமுறியது. "பெரியாழ்வார் பெற்ற பெருந்திருவே! நீ பிறந்த பெருநாளில் நின் புகழ் பேசி நீரஜாக்ஷனுடன் நின்னை வழிபடும் பாக்யமுள்ள குடியிற் புகுந்தேனில்லையே!—சீ! இதென்ன யோசனை? எனக்கெங்ஙனம் இந்த பாக்ய மெல்லாம்?" என்று கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

இரவில் ஸ்ரீ பார்த்தஸாரதிக்கும் திருப்பாவை பாடிய திருப்பாவைக்கும் புஷ்பப் பல்லக்குப் புறப்பாடு. சென்னையெல்லாந் திரண்டு அந்தச் செங்கண்மாலைக் காணச் சேர்ந்தது. மந்தா துடித்தாள். "எம் பெருமானது புறப்பாட்டைக் காணப்பெறாது வரும் விருந்தினர்க்குப் பக்குவான்னம் தயாரிப்பதிலன்றோ பொழுதுபோகவேண்டும். என்ன விருந்தினர்கள்! குடியர்களும் வெறியர்களும். அய்யோ அந்யாயமே" என்று மனம் நொந்தாள். பத்துப் பதினொரு மணிக்குக் கார் வாயிலில் நின்றது. இரண்டு பெண்களும் வெகு நாகரிகப் பட்டாடை யணிந்த இரு யுவகரும் வெளிவந்தனர். சுருள் சுருளாய் வளைக்கப்பெற்ற மயிரும் மீசையும், சுழலுங் கண்களும், அவர்கள் நடவடிக்கை முகத்திலேயே எழுதப்பெற்றதுபோல் ஆயிற்று. இந்தத் திருக்கூட்டத்தை உபசரித்து ஓடிச் சென்று, புருஷோத்தமனையும் புதுவைப் பெருமாட்டியையும் தேரடித் தெருவில் கண்களாரக் கண்டாள். 'அல்லிக்கேணி அமர்ந்த பெருமானே! 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே' என்ற ஆத்திவ்ய

தம்பதிகளை நமஸ்கரித்தாள். உள்ளம் மகிழ்ந்தாள். தன் துக்கமெல்லாம் 'என்ன தூர்த்த வாழ்க்கை! என்ன குடி!' என்று தன் குடும்பத்தின் ஸ்திதியை நினைத்தாள். மறந்தாள். வீடுசென்றாள். ஸொத்துக்களெல்லாம் போய்விட்டன. சம்பளத்திற் பெரும்பான்மை கடன்களுக்காகப் பிடிக்கப் பட்டது. அணையுந் தீபம் ஜ்வலிப்பதுபோல் படாடோபங்கள் இன்னும் அதிகமாகவே இருக்கின்றன. மந்தாவின் ஆபரணங்கள் இவனது லீலா கலாபங்களுக்காக ஆஹுதி செய்யப்பட்டன. மந்தாவின் கம்மல் தோடு ஒட்டியாணம் அட்டிகைகள் யாவும் பலியாயின. தினம் இரு நண்பர் கள். தினம் இரு மாதர்கள் தினம் விருந்து. ஆபீஸில் மிகவும் கெட்ட பெயர். நாணய மற்றவர்களுக்கு எங்கே ஸுகம்? கருணாகரனுக்கு யாதொரு கடிதமும் எழுதக் கூடாதென்று மந்தாகினிக்குக் கட்டளை. மந்தாகினி இதைப் பொருட்படுத்தவில்லை. ஆயினும் அவர் காதில் 'பதியின் ஆஜ்ஞையைத் தான் மீறினதாக என்றேனும் தெரிந்தால் வருந்துவார்; தன்னிடம் தாபப்படுவார்' என்பதற்காகவே அவருக்கு ஒரு கடிதமும் எழுதவில்லை. மந்தாவின் பதி அநேக ஸமயங்களில் இப்படி மர்யாதைக் குறைவாய் நடந்தும், அவருக்காக அவனிடம் பொறுமையே பாராட்டுவாள். "यदि मां धार्मिको रामो नासूयेन्मातृघातुकम्" என்றும் "त्वां च मां च हि धर्मात्मा नाभिभाषिष्यते ध्रुवम् ॥" என்னும் ப்ரஸித்தமான ஸ்ரீ பரதாழ்வான் ஸூக்திகளை நினைந்து ஸமாதானம் செய்து கொள்வாள். [தொடரும்]

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

தாரணஸு வைகாசிமீ

1உ	ஞாயிற்றுக்கிழமை	—	சூந்ய திதி.
2உ	திங்கட்கிழமை	—	சூந்ய திதி.
3உ	செவ்வாய்க்கிழமை	—	வ்ருஷபக்ருஷ்ண நவமி திதி.
5உ	வியாழக்கிழமை	—	ஸர்வ ஏகாதசி
7உ	சனிக்கிழமை	—	த்ரயோதசி - சதுர்த்தசி திதித்வயம்.
8உ	ஞாயிற்றுக்கிழமை	—	அமாவாஸ்யை திதி ; ஸர்வ அமாவாஸ்யை.
9உ	திங்கள்கிழமை	—	வ்ருஷப சுக்லப்ரதமை திதி.
10உ	செவ்வாய்க்கிழமை	—	வ்ருஷப சுக்ல த்விதியை திதி.
11உ	புதன்கிழமை	—	வ்ருஷப சுக்ல த்ரிதியை திதி.
12உ	வியாழக்கிழமை	—	வ்ருஷப சுக்ல சதுர்த்தி திதி.
13உ	வெள்ளிக்கிழமை	—	வ்ருஷப சுக்ல பஞ்சமி திதி.
14உ	சனிக்கிழமை	—	வ்ருஷப சுக்ல ஷஷ்டி திதி.
15உ	ஞாயிற்றுக்கிழமை	—	அதிதி.
20உ	வெள்ளிக்கிழமை	—	ஸர்வ ஏகாதசி.
21உ	சனிக்கிழமை	—	காஞ்சீ ஸ்ரீ வரதராஜன் ப்ரம்ஹோத்ஸவாரம்பம்.
23உ	திங்கட்கிழமை	—	**ஸ்ரீ நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்.**
24உ	செவ்வாய்க்கிழமை	—	பூர்ணிமா.
30உ	திங்கட்கிழமை	—	வ்ருஷப க்ருஷ்ண ஷஷ்டி ஸப்தமி திதி த்வயம்.
31உ	செவ்வாய்க்கிழமை	—	வ்ருஷப க்ருஷ்ண அஷ்டமிதிதி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸத் ஸம்ப்ரதாய தீபம்

[வித்வான் சிலுக்கூர் ஸ்ரீ. உப. மா. வேங்கட ராகவாசார்ய ஸ்வாமி
சிரோமணி, ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீ கார்யம், & ஏஜண்டு, ஹைதராபாத் ஸ்டேட்,
கத்வால் ஸம்ஸ்தாந தர்மாதிகாரி]

[ஸம்புடம் 2 : ஸஞ்சிகை 7 , பக்கம் 270-ன் தொடர்ச்சி]

பிறகு நம்மாழ்வார் ஸம்ஸார ஸாகர நிமக்நர்களான சேதநர்களைக் கரையேற்ற எண்ணங்கொண்டு திருவாய்மொழி என்கிற ஆயிரம் பாட்டுகளைப் பாடி ப்ரபத்தி மார்க்கத்தைப் ப்ரகாசிப்பித்தார்.

த்வாபர யுகத்தில் கௌரவர்களாலே பரிபாலிக்கப்பட்ட பாண்டிய தேசத்தில் தாம்ரபர்ணீ தீரத்தில் குருகை என்றொரு நகர் உண்டு. அந் நகரத்தில் தர்மதார ரென்று ஒருவர் இருந்தார். அவருக்குச் சக்ரபாணி என்கிற ஒரு குமாரர் இருந்தார். அவருக்கு ரத்நதாமா என்கிற ஒரு குமாரர் ஜனித்தார். அவருக்குக் காரி என்கிற ஒரு குமாரர் அவதரித்தார். அவர் யுக்த வயதில் உடைய நங்கையார் (நாத நாயகி) என்கிற பெண்மணியை யதாவிதி மணந்தார். அப்பெண்மணி பதி ஶுஶ்ருஷணபரையாகவும் பகவத் பாகவதாசார்யர்களிடம் பக்தியுள்ளவளாகவும் இருந்தாள். ஒருநாள் அவள் தன் தாய் வீட்டுக்குப் போய்த் திரும்பி மாமனார் வீட்டுக்கு வந்துகொண்டிருக்குமளவில், மார்க்கத்தில் திருக்குறுங்குடி நம்பியைத் தொழுது, தனக்குப் புத்ரன் வேண்டுமென்று யாசிக்க, அப்ரார்த்தனையைத் தலைக்கட்டி நம்பியும், 'உனக்கு ஸத்புத்ரன் ஜனிப்பான், நீ வ்யஸநப்படாதே' என்று அர்ச்சக முகமாகத் திருவாய்மலர்ந்தருளினார். பிறகு அப்பெண்மணி வெகு ஸந்தோஷத்துடனே தன் வீட்டுக்குச் சென்றாள். பிறகு பக்த பராதீநனான பகவான் தனக்கு ஸேநாதிபதியான விஷ்வக்ஸேநரை, நம்மாழ்வாராக அவதரிக்கும்படி நியமிக்க, அப்படியே ஸூத்ரவதீஸகரான விஷ்வக்ஸேநாழ்வான் உடைய நங்கையாருடைய கர்ப்பத்தில் ப்ரவேசித்துப் புத்ரராக அவதரித்தார். அச்சமயத்தில் ஶ்ரிய:பதியான நாராயணன் அந்த ஸூதிகா க்ருஹத்தில் வராஹ ரூபியாய் ஆவிர்ப்பவித்து அச் சிசுவுக்கு ஞானோபதேசம் செய்தார். ஆயிரம் பணா முடிகளையுடைய அநந்தாழ்வானும் புளியமர ரூபியாக அந் நகரத்தில் ப்ரகாசித்தார். பிறந்த அச்சிசு அந்நபாநாதிகளையும் ரோதநாதிகளையும் ஸ்தந்யத்தையும் துறந்து, பகவதுபதிஷ்ட ஞானமாகிற பாலாலே க்ஷுத்பிபாஸாதி ரஹிதமாய் அத்திருப்புளி யாழ்வார் அடியிற் சென்று ஸ்ரீமந் நாராயணைக பராயணமாய் இருந்துவந்தார். 'ஸஹஸ்ர ஶாகோபநிஷத்ஸமாகமம்' [என்

னுடைய பக்தனை நானே அவனது அந்திம தசையில் ஸ்மரிக்கிறேன்] என்று பகவான் சொன்னதுபோல, ஜாயமாந தசையிலும்,

"ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேந் மதுஸூதந: ।
ஸாத்விகஸ்ஸது விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்த சிந்தக: ॥"

என்று சொல்வதுபோலத் தான் கருடாரூடராக எழுந்தருளி, அவ்வாழ் வாரைக் குளிரக் கடாக்ஷித்து, 'பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்' என்று சொல்லியபடி, தன் திருமேனி அழகால் அவருள்ளம் மகிழும்படி செய்து, இவ்வாழ்வார் மூலமாக, வேதங்களுடைய ஸாரத்தை வேதோச் சாரணத்தில் அதிகார மில்லாத ஸ்திரீ சூத்ராதிகளும் மற்றும் யாவரும் வேத வேதாந்த தத்வங்களைத் தெரிந்துகொள்ளுமாறு ஸர்வாதிகாரமான த்ராவிட பாஷையில் கவிபாடும்படி செய்யவேண்டுமென்று ஸங்கல்பித்து அவ்வாறே அவரை அநுக்ரஹித்து அந்தர்த்தாநமானர். பகவத் கடாக்ஷ வீக்ஷணம் அவருக்கு நேர்ந்தவாறே அவ்வாழ்வார் பதினாறு வயதுள்ள திருமேனியை யுடையவராய், மன்மதன் போலே அதி ஸௌந்தர்ய முடையவராய், ஸமஸ்த வேத சாஸ்த்ர பாரங்கதராய், "த்வயேந தத்விவரணை: ப்ரபத்யே ப்ரபுமீச்வரம் । நிக்ஷிப்ய ச ஸ்வாத்மாநம் தத்பாதாப்ஜே க்ருதீ பவேத்" [த்வய மந்த்ரத்தாலும் அதன் விவரணங்க ளாலும் பகவானைத் தொழுது அவனுடைய சரணாரவிந்தங்களிலே தன் னுடைய ஆத்மாவை ஸமர்ப்பித்துத் தங்யனுகிறேன்] என்று சொல்வது போலும், "யத்க்ஷணம் விஷ்ணுரஹிதம் யந்முஹூர்த்தம் ந சிந்தயேத் । தஸ்யாபி ரோதிதவ்யம் தஸ்யுபிர்முஷிதம் யதா" [பகவத் த்யாந மில்லாமல் ஒரு பக்தனுக்கு ஒரு முஹூர்த்தமோ அல்லது க்ஷணமோ சென்றுவிட்டால், அப்பொழுது அவன், திருடர்களாலே அடிக்கப் பட்டவன் எப்படி முறையிட்டு ரோதநம் செய்வனோ அப்படியே இவன் ரோதநம் செய்ய ப்ராப்தன்] என்று சொல்வதுபோலும், 'த்ருடிர் யுகாயதே த்வாமபச்யதாம்' [உன்னை நாங்கள் எந்த க்ஷணம் ஸேவிக்கவில்லையோ அந்த க்ஷணம் எங்களுக்கு ஒரு யுகம்போல் இருக் கிறது] என்று கோபிமார்கள் கண்ணனைப் பார்த்துச் சொன்ன கணக்கி லேயும், 'தேந விநா த்ருணாக்ரமபி ந சலதி' என்றபடி பகவானை விட்டு ஆத்மதாரணம் பண்ணுவதும் சக்ய மில்லாமையால் ததேக த்யாந ராய் இருந்துகொண்டு தைல தாரையைப்போல அவிச்சிந்நமான ஸ்ம்ருதி ஸந்ததியை யுடையவராய், வேதாந்த ஸாரமான வித்யா பேதாதிகளையும் பகவானுடைய திருக்கல்யாண குணங்களையும் அவ தார ரஹஸ்யாதிகளையும் பகவானுடைய ஜகத் காரணத்வத்தையும் ப்ர பத்தி மார்க்கத்தையும் இனிய த்ராமிட பாஷையாலே ஆயிரம் பாட்டுக்க ளாகப் பாடி லோகோஜ்ஜீவநம் செய்தார்.

இவ்வாருகப் பகவான், நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெரு மானர் ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் ஸ்ரீமதாதி வண் சடகோப யதீந்த்ர

மஹாதேசிகன் முதலிய ஆசார்யர்களையும் தான் அநுப்ரவேசித்து ஆர்யாவர்த்தம் என்கிற இப்புண்ய பூமியில் அவதரிப்பித்தான். 'பஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸ்நஸ்ய வக்தா நாராயண: ஸ்வயம்' என்று ஸமஸ்த பாஞ்சராத்ரத்திற்கு வக்தாவாயும், 'காரணம் து த்யேய:' என்கிறபடி ஜகத் காரணனையும், 'ஸர்வவிஶ்வலோகாநாம் ஹரிர்ஹரிர் நாராயணோ ஹரி:', 'ஸர்வஶாஸ்த்ரம் ஹரிம் வந்தே ஸர்வலோகைகநாயகம்' என்றும் சொல்லுகிறபடியே, இந்த ஸம்ப்ரதாயத்திற்கு ஸ்ரீமந் நாராயணன் ப்ரதமாசார்யனாக இருந்து திருவஷ்டாக்ஷரம் த்வயம் முதலான ஸமஸ்த ரஹஸ்யார்த்தங்களையும் பெரிய பிராட்டியாருக்கு உபதேசித்தருளினான். பெரிய பிராட்டியார் ஸேநேஶரான விஷ்வக்ஸேநருக்கும், விஷ்வக்ஸேநர் சடகோப னென்கிற நம்மாழ்வாருக்கும், நம்மாழ்வார் நாதமுனிகளுக்கும், நாதமுனிகள் பத்மேக்ஷணர் என்று சொல்லப்பட்ட உய்யக்கொண்டாருக்கும், உய்யக்கொண்டார் ராமன் என்று சொல்லப்பட்ட மணக்கால் நம்பிக்கும், மணக்கால் நம்பி யாமுநாசார்யர் என்று சொல்லப்பட்ட ஆளவந்தாருக்கும், ஆளவந்தார் பூர்ண மிஶ்ரர் என்று சொல்லப்பட்ட பெரிய நம்பிக்கும், பெரியநம்பி ராமாநுஜாசார்யர் என்று சொல்லப்பட்ட ஸ்ரீ பாஷ்யகாரருக்கும் திருவிலச் சினை மந்த்ரோபதேசம் முதலானவைகளை ப்ரஸாதித்தார்கள்.

இவர்களில் நாதமுனிகள் என்பவர் வீரநாராயணபுரத்தில் சொட்டைக் குலத் தரசரென்று ப்ரஸித்திபெற்ற ஈஶ்வர முனிகளுடைய திருக்குமாரர். இவர் அத் திவ்யதேசத் தெம்பெருமானை மன்னாரைத் திருவடி தொழுது அங்கேயே சிலகாலம் வஸித்திருந்து, ந்யாய தத்வம் யோக ரஹஸ்யம் என்கிற க்ரந்தங்களை அருளிச்செய்து, ஆழ்வார் திருநகரிக் கெழுந்தருளி 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்கிற பத்துப் பாட்டுகளைத் திருப்புளியடியில் பன்னீராயிரம் தடவை நியமத்துடன் ஆவ்ருத்தி செய்து, நம்மாழ்வாரையும் மதுரகவி யாழ்வாரையும் யோக தசையில் ஸாக்ஷாத்கரித்து, அவரிடமிருந்து திருவாய்மொழி என்கிற ஆயிரம் பாட்டுக்களை உபதேசம் பெற்று ஶிஷ்யர்களுக்கு உபதேசித்து, லோக மெங்கும் அவற்றைப் பரவச் செய்து, வடதேச யாத்ரைசெய்து 'ஸ்ரீநாத்' என்கிற திவ்ய க்ஷேத்ரத்தில் ஸ்ரீ நாதனென்கிற திருநாமத்தை யுடைய கண்ணனை அங்கே ப்ரதிஷ்டை செய்து, இந்த விஶிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்திற்கு மிகவும் உபகரித்துப் பகவானுடைய பரதத்வத்தை ஸ்தாபித்தார். இவருடைய வ்ருத்தாந்தத்தைக் குருபரம்பரையில் பரக்கக் காணலாம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸீதா வியோகத்தின் சீர்மை

[வடுவூர் ஸ்ரீ. வி. எஸ். ரங்கநாதாசார்ய ஸ்வாமி, ஶிரோமணி,
ஸ்ரீ ராமக்ருஷ்ண கலாசாலை த்யாகராய நகர்]

ஸ்ரீ ராமபிரான் ஸீதையின் இரண்டாவது பிரிவைத் தானுகச் செய்ததற்கு வண்ணன் வார்த்தை காரணமென்று ஸ்ரீமத் ராமாயணத்தில் சொல்லியிருக்கிறது. அது உண்மைக் காரணமா? வேறு ஏதாவது காரணம் இருக்கக்கூடுமா? வண்ணன் வார்த்தை உண்மையான காரணமாகாது. ஏனென்றால், கேவலம் ஒரு வண்ணன் வார்த்தைக்காக ராமன் ஸீதையைக் காட்டிற்கு அனுப்பினுல், தன் ராஜ்யத்தில் உள்ள ப்ரஜைகளில் ஒருவரான லக்ஷ்மணன், ஸீதை அக்கியில் பரிசுத்தமானதை நேராகப் பார்க்கவில்லையா? அவர் நிந்திக்கமாட்டாரா? அவர் தமையன் என்று பயந்தாலும், தர்மாத்மாவான விபீஷணனும் ஸுக்ரீவன் முதலியோரும் நிந்திக்கமாட்டார்களா? 'அவர்கள் தன் ராஜ்யத்தில் இல்லாத ஜனங்கள்; அவர்களது புகழ்ச்சியோ இகழ்ச்சியோ இராமனது அரசாட்சிக்குப் புகழையோ இகழையோ தரக்கூடியவை யல்ல' என்றுலும், தன் ராஜ்யத்தி லுள்ளவராயும் குருவாயும் முக்கால விஷயங்களையும் அறிந்தவருமான வஸிஷ்டர் முதலிய மஹர்ஷிகள் ஸீதையின் வ்ருத்தாந்தத்தை அறியாரோ? அவர்கள், நிரபராதியும் பூர்ண கர்ப்பிணியுமான ஸீதையைக் காட்டிற்கு அனுப்பியது குற்றந்தான் என்று ராமனை நிந்திக்கமாட்டார்களோ? புத்தியில்லாத பாமர ஜனங்களின் வார்த்தைக்குப் பயந்து விவேகமுள்ள வித்வான்கள் வசைமொழிக்கு ஆளாவது நரியூருக்குப் பயந்து புலியூருக்குப் போன கதையில் முடிவடைகிறது. ஆனுல் இதன் உண்மை என்ன வென்பதை இங்கு ஆராய்வோம்.

இராமன் தான் காட்டிற்குப் போனதற்குக் கைகேயியின் வார்த்தையை வ்யாஜ மாக்கியதுபோல, இல்லாளை இருளடர்ந்த கானகம் அனுப்ப ஏகாலியின் வார்த்தையைக் காரணமாக்கினுன். உண்மையில் காரணம் அஃதன்று. மேல் குறிப்பிடுவதே காரணமாகும். எந்த அரசன் தன் ஸந்தோஷத்தை நோக்காமல் கஷ்டமடைந்தாவது ஜனங்களின் ஸந்தோஷத்தை நோக்குகிறுனே, அவன்தான் உண்மை அரசன். எந்த அரசன் தன் ஸந்தோஷத்தை நோக்கி ஜனங்களின் ஸந்தோஷத்தைக் கருதுகிறுனே, அவ்வரசன் தன் ஸந்தோஷத்துக்குக் காரணமாகிய தன் பெண்டாட்டி பிள்ளைகளின் இஷ்டத்தை நிறைவேற்றுவதைக் கருதி ஜனங்களின் இஷ்டத்தை நாடுவதால் பேரம் செய்யும் ஒரு வ்யாபாரியாகிறுன். உலகில் அரசர் அரசாட்சி செய்வது தங்களுடைய இஷ்டங்கள் தடங்க லின்றி நிறைவேறுவதற்கே. அநேக ராஜ்யங்களைத் தன் வசப்

படுத்தினால் அதிக த்ரவ்யம் சேரும். அதிக த்ரவ்யத்தினால் அரசன் ஜனங்களைத் தன் வசப்படுத்தித் தன் இஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம். இதுவே அரசர்களின் நோக்கம். இவ்விஷயத்தை மனத்தில் நினைத்து ஸ்ரீராமன் [அயோத்யா காண்டம் 52-வது ஸர்க்கத்தில்] ஸுமந்த்ரரைப் பார்த்துச் சொல்லும்போது

“ इक्ष्वाकूणां त्वया तुल्यं सुहृदं नोपलक्षये ।
यथा दशरथो राजा मां न शोचेत्तथा कुरु ॥
शोकोपहतचेताश्च वृद्धश्च जगतीपतिः ।
कामं भारावसन्नश्च तस्मादेतद्ब्रवीमि ते ॥
यद्यदाज्ञापयेत् किञ्चित्स महात्मा महीपतिः ।
कैकेय्याः प्रियकामार्थं कार्यं तदविकाङ्क्षया ॥
एतदर्थं हि राज्यानि प्रशासति नरेश्वराः ।
यदेषां सर्वकृत्येषु मनो न प्रतिहन्यते ॥”

[ஸுமந்த்ரரே! இக்ஷ்வாகு வம்சத்தினருக்கு உம்மைப்போன்ற தோழர் ஒருவரையும் நான் பார்க்கவில்லை. தசரத மஹாராஜர் என்பொருட்டு துக்கிக்காதவாறு நீர் நடந்துகொள்ள வேண்டும். வயது முதிர்ந்தவரும் துக்கத்தினால் உடைந்த மனதுடையவருமான அரசர் பட்டாபிஷேகமாகிற தன் இஷ்டத்தை இழந்துவிட்டார். கைகேயியின் ப்ரியத்தை விரும்பி எதை எவ்வாறு உத்தரவிடுவாரோ அதை ஆலோசிக்காமல் அப்படியே செய்யவேண்டும். இதற்காகவே (மனைவி மக்களின் ப்ரீதிக்காகவே) அரசர் ராஜ்யத்தை ஆளுகின்றனர். எதனால் இவர்களது இஷ்டமானது எல்லாக் கார்யங்களிலும் தடங்கல் அடையாதிருக்குமோ] என்று கூறுகிறார். ஆகையால் உலகில் அரசர் ராஜ்யமாளுவது தம் இஷ்டத்தை நிறைவேற்றுவதற்கே. அப்படி அரசுபுரிவது அரசாட்சியாகாது. எப்படி ஒரு யோகியானவன் தான் கஷ்டப்பட்டுக் கடுந்தவம் புரிந்து பகவானது ப்ரீதியை எதிர்பார்ப்பனோ, அப்படியே அரசரும் தர்மத்துடன் அரசுபுரிந்து ஜனங்களின் நல்லெண்ணத்தைப் பெறவேண்டும். எப்படி ஒரு மரமானது தான் வெயிலில் காய்ந்தாவது தன்னை யடைந்தவர்கட்கு நிழலை யுதவிக் குளிர்ச்சியைக் கொடுக்கிறதோ, அதேபோல ஓர் அரசன் தன் ஸுகத்தை எதிர்பாராமல் ஜனங்களின் ஸுகத்தைக் கோருபவனாய் அவர்களது துயரத்தைத் தவிர்க்கவேண்டும். எப்படி ஒருதாய் குழந்தைக்குப் பால்கொடுக்குங்கால் கடித்தலையும் பொறுத்து அதன் இஷ்டப்படி புரண்டு படுத்துப் பால்கொடுப்பாளோ, அதேபோல் ஓர் அரசன் உண்மையான அரசாட்சியில் உண்டான ஜனங்களின் வசைமொழியையும் பொறுத்துத் தன் ஸுகத்தைவெறுத்தாவது ஜனங்களின் த்ருப்தியையே நோக்கவேண்டும். இவ்வாறு இராமன் மனத்தில் எண்ணியே ஸுமந்த்ரருடன் மேற்கூறியவாறு உரைத்தார்போலும்.

[இதன் தொடர்ச்சியை 160-ம பக்கம் பார்க்க.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

அம்ருதமும் 40-வது பட்டம் அழகியசிங்கர் குமாரரும்

[ஸ்ரீ. உப. நடாதூர் ஆசுகவி சிரோமணி வே. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், வில்லூர்]

ஸுதாயா சதுஷ்பாத்விபூஷணம் ய:
ஸுதாகராகாரயஶா விராஜ: |
ஸ வேங்கடாத்ரீ வரதஸ்ஸுதாயா:
வியோகவாகாஶ ஹி த்ருஶ்யதே ஹா ‖ 1 ‖

[இதன் பொருள்] காருகுரிச்சி யென்று ப்ரஸித்தமான அம்ருதத்தால் செய்யப்பட்ட 'குரிச்சி' யென்னும் ஆஸநத்தில் அதற்கு அலங்காரமாய் அமர்ந்திருந்த இந்த ஸ்ரீ அழகியசிங்கர் குமாரர் கீர்த்தியில் சந்த்ரன் போன்றவர். ஆ! அவர் இப்பொழுது காணப்படவில்லையே. எந்தக் குரிச்சியில் எவர் வீற்றிருந்தது அழகாக இருந்ததோ, எவர் இல்லாமல் எது எவ்விதம் ஶோபை யற்றதாய்க் காணப்படுமோ, அவ்விதம் இவரில்லாமல் காருகுருச்சி காணப்படுகிறதே. இவ்விதம் தெய்வம் செய்துவிட்டதே.

ஸுதாயா சதுஷ்பாதிதி காமதேநு:
ஸ்ரீவேங்கடாத்ரீம் வரதாஹ்வயாநாம் |
ஸுதாமியத்ஸம் ஹ்ருதபோஹ காலம்
ஜாதா ஹ்யஶம் ஸம்வ்ருதி ஶோகதேநு: ‖ 2 ‖

[இ-ள்] இதுவரை காருகுரிச்சி யென்னும் காமதேநுவானது அம்ருதத்தைப் பொழிந்துகொண்டிருந்தது என்று அடியேன் எழுதும் பொழுதே, 'காருகுரிச்சி எவ்விதம் காமதேனு வென்று சொல்லப்படுகிறது? அது எந்த அம்ருதத்தை அளித்தது?' என்னும் கேள்விகள் எழுகின்றன. காருகுரிச்சி யென்பது ஸம்ஸ்க்ருதத்தில் ஸுதாயா சதுஷ்பாஸ என்றாகும். அதற்கு அம்ருதமயமான நாலு காலுள்ளது என்பது மேலாகத் தோன்றும் பொருள். அவ்விதமானால் அதைக் காமதேனு வென்றே சொல்லித் தீரவேண்டும். அதன் கால்களே அம்ருதமயமானால் அது கொடுக்கும் பால் அம்ருத மென்பதில் என்ன ஆக்ஷேபனை? இது கரந்து அளித்த அம்ருதத்திற்கு வேங்கடவரதர் என்று திருநாமம் (ஸ்ரீ 40-வது பட்ட அழகியசிங்கர் குமாரர்). ஸ்ரீ அழகியசிங்கர் குமாரரைச் சரியான காரணங்களையிட்டே அம்ருத மென்று சொல்லலாம். எவ்வித மெனில்: அந்த அம்ருதம் எவ்விதம் விளங்குகின்றதோ அவ்விதம் இவரும் விளங்கினார். அந்த அம்ருதம் அஸுரர்களை அணுகாமல், நல்லவர்களான தேவர்களையே அணுகி நின்றது. அதுபோல் இவரும் அஸுர ப்ரக்ருதி

களுடன் கலவாமல் நல்ல விபுதர்களுடனே கலந்து காலம் கழித்துவந்தார். தேவர்களுக்கு அஸுரர்கள் முதலிய மஹா துஷ்டர்களால் பெருந்தீங்கு விளைவதால், அவர்களைத் தடுக்கும் பலம் தம்மிடமில்லையென்றும், அவ்விதம் பல மளிக்கும் வஸ்து ஒன்றைத் தாம் பகவானிடமிருந்து பெற வேண்டுமென்றும் கருதித் தவம் புரிந்து தங்கள் மனம்போல் பகவானுடைய அருளால் பெற்றுர்கள். அதேபோல் 40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரும், தமது பூர்வாஸ்ரமத்திலேயே தம்மை ஆராதித்து லோகஹிதம் செய்யும்படி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் நியமிக்கப்போகின்றுன் என்றும், அத்தருணம் அஹோபிலத்திலும் ஸஞ்சாரம் செய்ய நேரிடப்போகிற தென்றும், அவ்விடத்திலோ ப்ரபல ப்ரம்ஹரக்ஷஸ் முதலிய உபத்ரவங்கள் உண்டென்றும், அதை விலக்கும் யோக்யதை உள்ள நல்ல ஒரு சிஷ்டனுன மந்த்ர நிபுணன் வேண்டுமென்றும், அவனை இப்பொழுதே பெற்றுவைப்போம் என்றும் பகவானை ப்ரார்த்தித்து இவரைப் பெற்றுக்கொண்டார் போலும்.

தேவர்கள் அம்ருதத்தால் ஹிதத்தை எவ்விதம் அடைந்தார்களோ, அவ்விதம் ஸ்ரீ அழகியசிங்கரும் அஹோபிலத்திற்கு எழுந்தருளியபொழுது, அங்கு தமக்கும் பரிஹரிக்க முடியாததாய் ஏற்பட்ட ப்ரம்ஹ ரக்ஷஸ்ஸின் பாதையைத் தமது சிஷ்யர்களைக்கொண்டு இவரை வரவழைத்து இவரால் அதைப் போக்கிக்கொண்டார். ஆகவே அம்ருதத்தைப் பெற்ற தேவர்கள்போல் இவரைப் பெற்ற அழகியசிங்கரும் ஆநந்தித்தார். இந்த ஸ்ரீ அழகியசிங்கர் குமாரரை நேரில் ஸேவித்தவர்களுடைய கண்களும், அம்ருதத்தைக் கண்டால் எவ்விதம் களிக்குமே அவ்விதம் களிக்கும் என்பது மிகவு முண்மை. கௌசிக முனிவரைப் பார்த்துத் தசரதர், 'யதாऽம்ருதஸ்ய ஸம்ப்ராப்தி:' [அம்ருதத்தை அடைந்ததுபோல் தேவரீரைப் பார்த்ததும் என் மனம் ஆநந்திக்கின்றது.] என்றுர். அழகாய்க் கண்குளிர ஸேவை ஸாதிக்கும் இவருடைய திருமேனி விஷயத்தில் இவர் அம்ருத துல்ய ரென்பதில் ஆக்ஷேபணையே கிடையாது. அந்த அம்ருதம் போய்விட்டது. காமதேனு இருந்த ஊரில் ஸோகதேனு குடிகொண்டது. சோகம் ஸஹிக்க முடியவில்லையே! இந்த ஸ்வாமியினிடம் பழகினவர்களுக்குத்தான் இந்த ஸோகத்தின் பெருமை தெரியும். இவரிடத்தில் மிகவும் விஸ்வாஸ முள்ளவராயும், இவர் யோக்யதையின் ரஸத்தை அறிந்தவராயும், மஹா தநிகராயும், கொடையாளியாயும் இருந்த ஸ்ரீ உபய. P. T. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியின் குமாரர் ஸ்ரீ திருமலை அய்யங்கார் ஸ்வாமி, தம்முடைய தகப்பனுர் பிரிவில்கூட அவ்வளவு ஸோகத்தை அறிந்திலர். இப்பொழுது அவர் இதை நினைந்து நினைந்து மிகவும் வருந்துகிறுர். அடியேனுக்கும் இவரால்தான் ஸ்ரீ அழகியசிங்கர் குமாரருடைய சேர்க்கை கிடைத்தது. இப்பொழுது திடீரென ஸ்ரீ அழகியசிங்கர் குமாரர் மறைந்ததைக் கேட்ட அடியேனுடைய உள்ளம் அகதியாய்த் தவிக்கின்றது.

ஸுதா வதம்ஸஸ்ய ஸுதாயா நயேயம்
வரம் விஹீநா விஸுதா ந ஜாதா ।
அஹோ புதாநாம் விஸுதேதி வாச்யா
நிகண்டுவர்கே வஸுதாபி ஜாதா ॥ 3 ॥

[இ-ள்]. இந்த அழகியசிங்கர் குமாரர் என்னும் அம்ருதத்தை விட்டுப் பிரிந்த காருகுரிச்சி யென்ற காமதேனு மாத்ரம் (விஸுதா) அம்ருதமற்றதாய் ஆய்விட்டது என்பது மாத்ர மில்லை. வஸுதா வஸுதா என்று உலகத்தில் சொல்லப்பட்டுவரும் இப்பூமியே, இந்த அம்ருத மற்றதாய் ஆய்விட்டதால், நிகண்டுகளில் வித்வான்களால் வஸுதெ என்று சொல்லப்படாமல் விஸுதெயென்று படிக்க வேண்டியதாய் ஆய்விட்டது.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாபாங்க ஸுதாவர்ஷேண சேதிநீ ।
ஸுதாவிரஹஸஞ்ஜாத ஸந்தாபம் வ்யபோஹதி ॥ 4 ॥

[இ-ள்.] இந்த அழகியசிங்கர் குமாரர் என்ற அம்ருதப் பிரிவால் ஏற்பட்ட தாபத்தை இந்தப் பூமியானது ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையின் கடாக்ஷமாகிற அம்ருத வர்ஷத்தால் போக்கடிக்கிறுள்.

[157-ம் பக்கத்தின் தொடர்ச்சி.]

ஸ்ரீராமன் அதையொட்டியே, அரசுபுரிவதால் உண்டாகக்கூடிய நன்மைகள் தன்னால் ஆளப்படும் மாந்தர்களுக்கேயன்றி, தன்னைச் சேர்ந்த மனைவி மக்கள் முதலியவர்களுக்குக் கிடையாவென்று நிச்சயித்தார். ஸீதை அரண்மனையில் இருந்தால், தான் அரசாட்சி புரிவதால் உண்டாகும் ஸுகமோ மேன்மையோ இராணி என்ற பட்டமோ அவளுக்கு ஸம்பவிக்கக்கூடும். அப்பொழுதுதான் அரசாட்சி புரிவது மனைவி மக்களின் மேன்மைக்கே என்று தோன்றுமே யல்லது, ஜனங்களின் மேன்மைக்கே என்று தோன்ருது என்று எண்ணினர். வண்ணன் வார்த்தையை வ்யாஜமாக்கினர். ஸீதையைக் காட்டிற் போக்கினர். பிறக்கப்போகும் குழந்தைகள் அரச குமாரர்களா யிருப்பினும், அவர்கள் அலங்கார உடை தரித்து அரண்மனையில் அரச குமாரர்களுடன் வாழும் உயர்ந்த வாழ்வின்றி, முனிகுமாரர்களுடன் பிறந்து மரவுரி தரித்து மான்களுடன் கூடித் தாழ்வான ம்ருக வாழ்க்கையில் வளரட்டும் என்று எண்ணினர். அரசு புரிவதால் உண்டாகும் தன்னுடைய மேன்மை தன் குழந்தைகளுக்கும் வரவேண்டாம் என்று எண்ணினர் போலும். மண்ணுகிய பூமியில் ஆசையை வைத்தார். ஸீதையாகிய பெண்ணுசையைத் துறந்தார். மக்களாசையை மறந்தார். துறவறம் பூணுவதற்கு ஸமமாக மனைவி மக்களைத் துறந்து, அவர்களின் இஷ்டமாகிய தன் ஸந்தோஷத்தைக் கருதாமல் ஜனங்களின் ஸந்தோஷத்தை மட்டும் தன் ஸந்தோஷமெனக் கருதி ஸீதையைப் பிரிந்து பதினுயிர வருடங்கள் அரசாட்சி புரிந்து அரசர்கட்கு அரசாட்சி செய்யும் முறையை அநுஷ்டித்துக் காட்டினர்.

16 JUN 1944

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

மந்வாதி ஸ்ம்ருதிகளின் அந்தரங்கக் கருத்து

[ஸ்ரீ. உப. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர், மாம்பலம்.]

பகவான் மநு என்பவர் ஸ்வயோக மஹிமையால் பராவர தத்வ யாதாத்ம்யத்தை ஸாக்ஷாத்கரித்த மஹர்ஷிகளுள் ஒருவர். "**यद्वै किञ्चन मनुरवदत्तद्भेषजम्**" [மநுவின் வாக்யமெல்லாம் ஸகல ஜகத்திற்கும் மருந்து போன்றது] என்று அவருக்கு ஶ்ருதி ப்ரஸித்தி உண்டு. வ்யாஸ பகவான், கபிலருடைய தத்வ உபலப்தியை ப்ராந்தி மூலமென்று நிரஸிக்குமிடத்தில், அது மநு போன்ற மஹர்ஷிகளுடைய உபலப்திக்கு விருத்தமாக இருக்கின்றது என்னும் காரணத்தைக் கொண்டே "**इतरेषाञ्चानुपलब्धेः**" என்னும் ஸூத்ரத்தால் நிரஸித்திருக்கிறார். இவ்வாறு மிகப் பெரியோர்களால் கொண்டாடப்பட்டிருக்கும் விபவத்தையுடைய அம்மஹான் 'மநு ஸ்ம்ருதி' என்னும் ஶாஸ்த்ரமொன்றை அநுக்ரஹித்திருக்கிறார். அதைக் கேவலம் தர்ம ஶாஸ்த்ரமென்றே ஸாமாந்ய ஜநங்கள் சொல்வார்கள். அது வர்ணாஶ்ரம தர்மங்களைப் பஹுவாக ப்ரதிபாதிக்கின்றது என்பது உண்மையே. ஆனால், அது தத்வத்தையே உணர்த்துகிறதென்றும், ஆகையால் அது தத்வ ப்ரதிபாதநபரமான ஶாஸ்த்ரமென்றும் அதன் அந்தரங்கக் கருத்தை அறிந்த ஆசார்யர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். ஸ்ரீ ஶ்ருத ப்ரகாஶிகாசார்யர் பின் வருமாறு அநுக்ரஹித்திருக்கிறார்:—"**आसीदिदं तमोभूतम्**" என்று ஆதியிலும் "**प्रशासितारम्**" இத்யாதியால் அவஸாநத்திலும் இதில் பகவத் தத்வம் விவரிக்கப்பட்டிருக்கின்றது; மத்யத்திலும் "**ब्रह्मविद्भ्यः**" இத்யாதியால் ப்ரஹ்மஜ்ஞாநமுடையவர்கள் பஹுவாகப் புகழப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் புருஷ ஸூக்தம் முதலியவைகளால் ப்ரதிபாதிக்கப்படும் பரப்ரஹ்ம ஶப்தவாச்யனான பகவானுடைய ஸ்வரூபமே இதில் உபதேசிக்கப்படுகின்றது.' இந்த நிர்ணயத்திற்கு அநுகூலமாக ஒரு அடையாளமும் அந்த ஶாஸ்த்ரத்தின் ஆரம்பத்திலேயே காணப்படுகின்றது என்று சொல்லலாம். "**धर्मान्नो वक्तुमर्हसि**" [தர்மங்களை எங்களுக்கு உபதேஶிக்க வேண்டும்] என்று தர்ம விஷயமான ப்ரஶ்நத்தைச் செய்த ருஷிகளுக்குத் தர்மவிஷயமாக உத்தரத்தைக் கொடுக்கவேண்டியது உசிதமாக இருக்க, "**आसीदिदं तमोभूतमप्रज्ञातमलक्षणम्**" இத்யாதியால் ப்ரளய தஶையில் காரணாவஸ்தையை அடைந்திருந்த ஜகத்தின் ஸ்ருஷ்டி ப்ரகரணத்தை அவதரிப்பித்து, "**योऽसावतीन्द्रियग्राह्यस्सूक्ष्मोऽव्यक्तस्सनातनः**" என்றும், "**आपो नारा इति प्रोक्ता आपो वै नरसूनवः**" என்றும், இன்னும் இம்மாதிரி பஹு ப்ரகாரமாக அப்ரஸ்துதமோவென்று நினைக்கக்கூடிய

தத்வ விஷயமான விவரணத்தைச் செய்திருக்கிறார். ஶாஸ்த்ரத்தின் மஹா ப்ரயோஜநம் தத்வ ப்ரதிபாதநமே என்பதை ஸூசிப்பிக்கவேண்டு மென்னும் கருத்திராவிட்டால் இம்மாதிரியான உபக்ரமம் ஸங்கதமாகுமோ?

ஸ்ரீ வ்யாஸ பகவானும் இந்த ஶாஸ்த்ரம் தத்வ ப்ரதிபாதநபரமே என்று திருவுள்ளம் பற்றியிருப்பதாக அவருடைய ஸூத்ரத்திலிருந்து விளங்குகின்றது. ஸ்ம்ருத்யதிகரணத்தில் "स्मृत्यनवकाशदोषप्रसङ्गादिति चेन्नान्यस्मृत्यनवकाशदोषप्रसङ्गात्" என்னும் ஸூத்ரம் இருக்கின்றது. இதன் ப்ரகரண மென்னவென்றால் :—பரப்ரஹ்ம ஶப்தவாச்யனான ஸ்ரீமந் நாராயணனே ஜகதேக காரணமென்று வேதாந்திகள் செய்த நிர்ணயத்தை ஸாங்க்யன் பஹு ப்ரகாரமாக ஆக்ஷேபித்தான். அந்த ஆக்ஷேபங்களுக்கெல்லாம் ஸமாதாநம் சொல்லப்பட்ட பிறகும், அந்த ஸாங்க்யன் மற்றுமொரு ப்ரகாரமாகப் புதிய ஒரு ஆக்ஷேபத்தைச் செய்ய ஆரம்பிக்கிறான். அவன் சொல்வதாவது :—'வேதாந்த வேத்யமான தத்வம் எளிதில் அறியக்கூடியதன்றாகையால், அதன் கருத்தை நிஶ்சயம் செய்வதற்கு மஹர்ஷிகளால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள ஸ்ம்ருதி முதலியவைகளை உப ப்ருஹ்மணங்களாகக் கொள்ளவேண்டும். கபில மஹர்ஷியால் நிபத்தமாயிருக்கும் ஸ்ம்ருதி அந்த அம்ஶத்தில் மிகவும் உபகாரகமாக இருக்கக் கூடியது; ஏனென்றால், கபிலர் ஒரு மஹர்ஷி; "ऋषिं प्रसूतं कपिलम्" இத்யாதி வாக்யங்களால் அவர் ஆப்தரென்று கொண்டாடப்பபட்டிருக்கிறார். ஆகையால், அந்த ஸ்ம்ருதியை உப ப்ருஹ்மணமாக எடுத்துக்கொண்டு, அதில் அந்தக் கபிலர் விளக்கியிருக்கும் ப்ரகாரம் வேதாந்தார்த்தத்தை நிச்சயிப்பதே உசிதமாகும். அதில், ப்ரதாநமே ஜகத் காரணமென்று உபதேஶிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால், அதுவே ஶாஸ்த்ர ஸம்மதம். இவ்வாறு போகாவிட்டால், அந்த ஸ்ம்ருதி கேவலம் தத்வத்தை ப்ரதிபாதிக்கிறபடியால், அது விஷயாலாபத்தால் அப்ரமாணமாக [அதாவது: நிரவகாஶமாக] ப்ரஸங்கிக்கும். அது பெரியதொரு தோஷமாக மாட்டாதோ?' இதுதான் "स्मृत्यनवकाशदोषप्रसङ्गात्" என்பதன் அர்த்தம். "इति चेन्न" [அது சரியில்லை] என்று அதை ஸூத்ரக்காரர் நிரஸிக்கிறார். நிரஸந ப்ரகாரமாவது :—'வேதாந்த வாக்யங்களின் தாத்பர்யத்தை நிர்ணயிக்கும் விஷயத்தில் ஸ்ம்ருத்யபேக்ஷை அவஶ்ய மென்பது உண்மையே. ஆனால், கபில ஸ்ம்ருதிக்கு நிரவகாஶத்வ ரூபதோஷம் ப்ரஸங்கிக்கின்றது என்னும் காரணத்தால் அதை உபப்ருஹ்மணமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லும் பக்ஷத்தில், அப்படி அதை அங்கீகரித்து இதர மந்வாதி ஸ்ம்ருதிகளை அநாதரித்தால், அந்த ஸ்ம்ருதிகளுக்கு அதே நிரவகாஶத்வ தோஷம் ப்ரஸங்கியாதோ? மந்வாதிகளும் ருஷிகளாகவும் ஆப்தர்களாகவு மிருக்கிறார்களன்றோ? அவர்களுடைய ஶாஸ்த்ரங்களுக்கு மாத்ரம் நிரவகாஶத்வ தோஷம் ஸஹ்யமாகுமோ? என்று கேட்கிறார். இதுதான் "अन्यस्मृत्यनवकाशदोषप्रसङ्गात्" என்பதன் கருத்து. மந்வாதி

ஸ்ம்ருதிகளும், கபில ஸ்ம்ருதிபோல, கேவலம் தத்வப்ரதிபாதநபரங்களே என்னும் எண்ணம் ஸூத்ரக்காரருடைய திருவுள்ளத்தில் இராவிட்டால், இம்மாதிரி கேள்வி அஸங்கதமாகும் என்பது வ்யக்தம்.

'இந்த நிர்வாஹம் ஸூத்ரக்காரரால் திருவுள்ளம் பற்றப்பட்டிருக்கின்றது என்பதை ஒத்துக்கொள்வோம். அந்தக் காரணத்தால் மாத்ரம் அது அங்கீகாரார்ஹமாகிவிடுமோ? அவர் சொல்வது வஸ்து ஸ்திதிக்கு ஒத்ததாக இருத்தல் வேண்டாவோ? மநு ஸ்ம்ருதியில் ஆதி முதல் அந்தம் பர்யந்தம் வர்ணாஸ்ரம தர்மங்களே ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றனவே. அதை எப்படி அபலபிக்கக்கூடும்?' என்று ஒரு ப்ரஸ்நம் இவ்விடத்தில் உதிக்கின்றது. இதற்கு ஸமாதாநத்தை ஸூத்ரக்காரர் வ்யக்தமாகச் சொல்லவில்லை. ஆனால் த்ருப்திகரமான ஒரு ஸமாதாநத்தை ஸ்ரீ பாஷ்யகாரர் தமது ஸ்ரீ பாஷ்யத்தில் வ்யக்தமாக உபபாதித்திருக்கின்றார். அதாவது :—"परब्रह्मभूतपरमपुरुषाराधनत्वेन धर्मान्विदधतीनां मन्वादिस्मृतीनामाराध्यभूतपरमपुरुषप्रतिपादनाभावे सति तदाराधनभूतधर्मप्रतिपादनासंभवात्" [மந்வாதி ஸ்ம்ருதிகளில் ப்ரதிபாதிக்கப்படும் வர்ணாஸ்ரம தர்மங்களெல்லாம் பரம புருஷாராதந ரூபமாகையால், அவைகளைக் கொண்டு ஆராதிக்கப்படவேண்டிய பரமபுருஷ ப்ரதிபாதந பரத்வம் இந்த ஶாஸ்த்ரங்களுக்கு உண்டென்று சொல்லக்கூடுமன்றோ? ஆராதநத்தின் நிஷ்பத்தி ஆராத்யனுடைய ஜ்ஞாநமிராவிட்டால் ஸம்பவிக்குமோ? ஆராத்யபூதனான பரமபுருஷனை அவை ப்ரதிபாதிக்கவில்லையென்று சொல்லும் பக்ஷத்தில் ஆராதந ரூபமான தர்மங்களையும் அவை ப்ரதிபாதிக்கவில்லையென்றன்றோ சொல்லவேண்டி வரும்?] இந்த நிர்வாஹம் மிகவும் ஸமஞ்ஜஸம். இது ஸூத்ரக்காரரால் வ்யக்தமாகச் சொல்லப்படாவிடினும், அவருடைய ஹ்ருதயத்தில் இது இருந்திருக்க வேண்டுமென்றே நாம் அறியவேண்டும். இந்தக் கருத்து அவருடைய மநஸ்ஸில் இராவிட்டால், அந்த ஸூத்ரத்திற் சொல்லப்பட்டிருக்கும் ஹேது சரியான ஹேதுவாக மாட்டாது. அது எப்படி யென்பதை விசாரிப்போம்.

கபில ஸ்ம்ருதிக்கு நிரவகாஶத்வம் ப்ரஸங்கிக்கின்றதே என்று சொன்ன பூர்வபக்ஷிக்கு, மந்வாதி ஸ்ம்ருதிகளுக்கும் நிரவகாஶத்வம் ப்ரஸங்கிக்கின்றது என்று பதில் சொல்வது ஸமஞ்ஜஸமான ஸமாதாநமாகமாட்டாது என்பது நிஶ்சயம். நிரவகாஶத்வ ரூபமான தோஷம் இரண்டுக்கும் துல்யமானால் அவைகளுள் ஒன்றை த்யஜித்து மற்றொன்றை உபாதாநம் செய்வதற்குப் பலாதிக்யம் வேண்டும். அப்படிப்பட்ட அதிக பலமொன்றும் சொல்லாமல் ஒரு பக்ஷத்தை ஸாதிப்பது உசிதமன்றுதான். ஆனால், இதற்கு ஸமாதாநமொன்று ஸூத்ரக்காரரால் ஸூக்ஷ்மமாக ஸூசிப்பிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது :—'கபிலர் கக்ஷியில் அவரைத் தவிர்த்து வேறொரு ருஷியுமில்லை; மநுவின் கக்ஷியிலோ

அநேக ருஷிகள் இருக்கிறார்கள். ஆகையால் "भूयसां स्याद्बलीयस्त्वम्" என்னும் ந்யாய ப்ரகாரம் மநு ஸ்ம்ருதிக்கு அதிக பலமுண்டு' என்பதே. இது ஸூத்ரக்காரரால் விவக்ஷிக்கப்பட்டது என்பது "इतरेषां चानुपलब्धेः" என்னும் ஸூத்ரத்தில் 'इतरेषाम्' [மற்றவர்களுக்கு] என்னும் பஹு வசநத்தில் ஸூசிப்பிக்கப்பட் டிருக்கின்றது. இதை ஆதாரமாகக்கொண்டு முதல் ஸூத்ரத்தில் இருக்கும் "अन्यस्मृत्यनवकाश" என்பதிலும் 'अन्यासां स्मृतीनाम्' என்று பஹு வசநமே விவக்ஷிதமென்று க்ரஹிக்கக்கூடும்.

இதனுடன் ஸ்ரீ பாஷ்யகாரர் வேறு சில அதிக பலங்களையும் ஸூசிப்பித்திருக்கிறார். அவையாவன:—(1) கபில ஸ்ம்ருதி உபதேசிக்கும் ப்ரகாரம் அசேதநமான ப்ரதாநத்தை ஜகதேக காரணமாகச் சொன்னால், ஜகத்தில் சேதந வஸ்துக்களும் தென்படுகிறபடியால், அசேதநமான காரணத்திலிருந்து சேதநனை கார்யம் உண்டாகின்றது என்று ஒத்துக்கொள்ளவேண்டி வரும். இது ந்யாய விருத்தம். மநுவின் தத்வோபலப்தியிலோ ஒருவித ந்யாய விரோதமு மில்லை. ஆகையால் ந்யாய விருத்தமான ஸ்ம்ருதியின் பலத்தைக் காட்டிலும் ந்யாயத்திற்கு அவிருத்தமான ஸ்ம்ருதியின் பலம் அதிகமன்றோ? [न्यायविरुद्धस्मृत्यनुगृहीतश्रुतेरपि न्यायाविरुद्धस्मृत्यनुगृहीतश्रुतिः प्रबला]. (2) அதீந்த்ரியமான அர்த்தங்களை யதாவஸ்திதமாக ஸாக்ஷாத்கரித்து யதாத்ருஷ்டமாகச் சொல்பவர்களை ஆப்தர்களென்று சொல்வார்கள். அவர்களுள், சில அர்த்தங்களை மாத்ரம் ஸாக்ஷாத்கரித்துச் சொல்பவர்களென்றும் ஸகல அர்த்தங்களையும் ஸாக்ஷாத்கரித்துச் சொல்பவர்களென்றும் இரு வகுப்பினர் உண்டு. முதல் வகுப்பினர் கேவலம் ஆப்தராவார்; இரண்டாவது வகுப்பினர் ஆப்ததமராவார். கபிலர் கேவலம் ஆப்தரே; மங்வாதிகளோ ஆப்ததமர்கள். [आप्तमात्रप्रणीतस्मृत्यनुगृहीतश्रुतेरपि आप्ततमप्रोक्तस्मृत्यनुगृहीतश्रुतिः प्रबला]. மங்வாதிகளுக்கு "यद्वै किञ्च मनुरवदत्तद्भेषजम्" என்றும், "स होवाच व्यासः पाराशर्यः" என்றும் ஸார்வத்ரிகமான ஸாக்ஷாத்காராதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. கபிலருக்கு இம்மாதிரியான ஶ்ருதி ப்ரஸித்தி இல்லை. இவையெல்லாம் வ்யாஸ பகவானால் விவக்ஷிக்கப்பட்டவை என்பதே ஸ்ரீ பாஷ்யகாரருடைய திருவுள்ளம்.

இவ்விடத்தில் கவனிக்க வேண்டிய அம்ஶம் ஒன்று உண்டு. அது என்னவென்றால்:—கபில ஸ்ம்ருதி முழுவதும் நிராகரிக்கப்படவில்லை. எந்த அம்ஶங்களில் அது வேத விருத்தமாக இருக்கின்றதோ அந்த அம்ஶங்களில் மாத்ரம் அது த்யாஜ்யம் என்பதுதான் ஆசார்யர்களுடைய திருவுள்ளம். வ்யாஸ பகவானுக்கும் அதுதான் இஷ்டம். ப்ருஹஸ்பதி மதத்தை த்யஜிப்பதற்கும் அதுவே காரணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

---

(1)

குளித்தலையில் ஸ்ரீ அழகியசிங்கர்

அகண்ட காவேரிக் கரையில் வானளாவி நிற்கும் அழகிய பலவித பல வ்ருக்ஷங்களுக் கிடையே விளங்காநிற்கும் குளித்தலை அக்ரஹாரத்திற்கு 6—4—44 வியாழக்கிழமை காலே திருப்பளாத்துறையிலிருந்து நம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடன் ஸகல பரிவாரங்களும் புடைசூழ எழுந்தருளினர். அப்போது உள்ளூர் ஆஸ்திகர்கள் அனைவரும் பூர்ண கும்ப வாத்யாதி ஸமஸ்தோபசாரங்களுடனும் எதிர்சென்று '[illegible]' என்றபடி வெகு நாட்களாய் விடாய் தீர்க்க ஆசையுள்ள சகோர பக்ஷிகள் போன்று, பூமியி லிறங்கிய அநிமேஷர் களோ என்னலாம்படியாய் இமை கொட்டாமல் ப்ரதீக்ஷித்திருந்தனர். ஸ்ரீ அழகிய சிங்கரால் அநுக்ரஹிக்கப்பட்ட ஸ்ரீஸூக்திகளைப் பக்தர் குழாங்கள் அனைவரும் மெய்ம் மறந்து கேட்டனர்.

பின்னர் அக்ரஹாரிகாள் பெருமாளையும் ஸ்ரீ அழகியசிங்கரையும், தோரணதிகளாலே அலங்க்ருதமான உயர் திருவீதியிலே அழகிய இரு திருமாளிகைகளில் எழுந்தருளச் செய்தனர். ஒருவரும் எதிர்பாராத விதமாய் ஐந்து நாட்கள் ஸம்ரமமான ததீயாராதநாதிகளாலே ஸ்ரீ. அரசலூர்-ரகுநாதய்யங்கார் ஸ்வாமி, வக்கீல் ஸ்ரீ K. C. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, வக்கீல் ஸ்ரீ V. ராமாநுஜ ஐயங்கார் ஸ்வாமி, தண்ணீர்ப்பள்ளி ஸ்ரீ. T. K. ஸ்ரீநிவாஸாசாரிய ஸ்வாமி, மஹாராஜராஜ ஸ்ரீ M. K. ராதாக்ருஷ்ணய்யர் முதலிய ப்ரமுகர்களான ஆஸ்திகர்கள் த்வாரா ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் '[illegible]' ஆராதிதனானன். நான்கு நாட்கள் முறையே ஸ்ரீ உப. வக்கீல் K. C. ராமஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீ உப. பந்தல்குடி ஸௌம்ய நாராயணய்யங்கார், அரசலூர் ஸ்ரீ. K. S. க்ருஷ்ணஸாமி ஐயங்கார், அயிலூர் ஸ்ரீ. K. வீரராகவய்யங்கார் ஸ்வாமிகளால் டோலோத்ஸவம் கண்ணனுக்கு வெகு விமர்சையாய் நடத்தப்பட்டது.

கடைசி நாள் ஸ்வாதி யன்று ஸ்ரீ உப. R. A. ராஜேந்திரம் சேஷாத்ரி ஐயங்காரால் பெரிய பெருமாளுக்குத் திருமஞ்சநம் விசேஷ ததீயாராதநத்துடன் நடத்திவைக்கப்பட்டது. ஸகல மதஸ்தர்களாலும் ஸாமரஸ்யத்துடன் பெருமாள் ஆராதிக்கப்பட்டது ஊராரின் பெரும் பாக்யமே. ஸ்ரீ ந்ருஸிம்ஹனின் திருவுள்ள வுகப் பிற்கு அறிகுறியாய் இரண்டு நாட்கள் ஸ்வல்ப மழையும் வர்ஷித்தது. எல்லா ஆஸ்திகர்களின் வேண்டுகோளுக் கிணங்கி ஸ்ரீ அழகியசிங்கரால் மூன்று தினங்கள் முறையே **ஆஸ்திக்யம் பக்தி ஸந்த்யாவந்தநம்** என்னும் விஷயங்கள் வெகு விரிவாயும் அழகாயும் உபந்யஸிக்கப்பட்டன. கடைசி தினமாகிய ஸ்வாதியன்று இரவு டோலோத்ஸவ ஸமயத்தில், உள்ளூர் ஆஸ்திகர்களின் சார்பாக, நாச்சியார் கோவில் நடாதூர் ஸ்ரீ உப. க்ரு. ராகவாசார்யஸ்வாமியால் சில ஶ்லோகங்கள் ஸ்ரீ ஸந்நிதியில் படித்து ஸமர்ப்பிக்கப்பட்டன. ஸ்ரீ அழகியசிங்கர் ஷியார்க்கு உசிதமாய் ஸம்பாவனை செய்தருளினர். வெகு நாட்களாய் ப்ரதீக்ஷிக்கப்பட்டிருந்த ஸ்ரீ சடாரி தீர்த்தம் முதலியவைகளால் எல்லோரும் அமந்தாநந்த மடைந்தனர். தங்கள் உடல் பொருள் ஆவிகளைக் கொடுத்து உபகரித்த ஸ்ரீ உப. பந்தல்குடி ஸௌம்ய நாராயணய்யங்கார் ஸ்வாமி, தண்ணீர்ப் பள்ளி ஸ்ரீ. T. K. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி முதலியோரின் பத்தி அளவற்றதும் வியக்கத்தக்கதுமா யிருந்தது. உள்ளூரார் யாவரும் முடிவில் தாயைப் பிரியும் சேடைப் போல் ஸ்ரீ அழகியசிங்கர் பிரிவிற்கு மிக வருந்தி மணவாசி வழியே எழுந்தருளும் பெருமாளையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் வெகுதூரம் வரை பின் சென்றுகொண்டு விட்டுத் திரும்பினர். ஐந்து திநங்களும் இம்மஹோத்ஸவத்தால் பொழுது வெகு ஆநந்தமாகச் சென்றது.

S. V. **நரஸிம்ஹாசார்யன், சிரோமணி**

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

(2)

திருப்புல்லாணியில் திருநக்ஷத்ர மஹோத்ஸவங்கள்

'ஆஹ்லாதந ஜகந்நாத ஸேதுபந்த பராயண' என்றும்
'ஆஹ்லாதஶாயிநஸ்தல்பே ஹ்ருஷ்டம் ஸர்வவாஸநிவாரக |
ஸர்வத்ர ராஜஸதநம் ஸர்வஸேவ்யஜநாயக ||' என்றும்

பக்த கோடிகளுக்கு ஸர்வ மங்களங்களையும் கொடுக்கக்கூடிய ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனும் ஜகந்நாதனும் நித்யவாஸம் பண்ணுகிற தர்ப்பசயநம் என்னும் புல்லாரண்ய க்ஷேத்ரத்தில் தெற்கு ரத வீதியில். ஸ்ரீ அஹோபில மடம் 42வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரான ஸ்ரீமத்வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாதி ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகனால் ஐயாயிரம் ரூபாய் வரை செலவழித்து ஜீர்ணோத்தாரணம் செய்து விமாந ப்ரதிஷ்டை செய்விக்கப்பட்ட ஸ்ரீ அஹோபில மடத்தில், சென்ற புரட்டாசிமீ 19உ ஸ்ரீஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வர்ஷ திருநக்ஷத்ர மஹோத்ஸவத்துக்காக 10உ முதல் திருமஞ்ஜநம் ஸேவை சாத்துமறை கோஷ்டிகள் நடந்து, திருக்கேட்டையன்று இரண்டு வேளையிலும் திருவீதி எழுந்தருளி, தேசிகன் ஸந்நிதி மங்களாஶாஸநம் செய்து, சாத்துமறை ஸம்பாவனை கோஷ்டிகள் அதி விமர்சையாகவும், மறுநாள் விடாயாற்றி டோலோத்ஸவமும் நடத்தப்பட்டன. மார்கழிமீ 9உ 40-வது பட்டம் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய வர்ஷ திரு நக்ஷத்ரமான திருவிசாகத்தன்று ஸேவை சாத்துமறை ஸம்பாவனைகளுடன் ததீயாராதநமும் நடத்தப்பட்டது.

ஷைமீ 17உ 41-ம் பட்டம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகனுடைய திருநக்ஷத்ரம் வழக்கம்போல் நடந்ததுடன், சென்ற தை மாஸம் 12உ ஷை மடத்தில் தற்காலம் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரான ஸ்ரீமத்வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாதி ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகனுடைய திருநக்ஷத்ரத்துக்குப் பாதுகாராதநம் ஸ்ரீமத் அழகியசிங்கர் ஸம்பாவனை முதலியவைகளுடன் ததீயாராதநமும் ராத்ரி டோலோத்ஸவமும் நடைபெற்றன. ஷை விஷயங்களில் ஆராதகர் ஸ்வாமியின் முயற்சியும் ஶ்ரத்தையும் ஶ்லாகிக்கத் தக்கன.

கநபாடி ஸ்ரீநிவாஸாசார்யன், திருப்புல்லாணி.

---

(3)

ஆசார்யத்ரயம்

[குறிச்சி ஸ்ரீ. உப. ந. ராமபத்ராசார்யர்]

உலகோர் புகழுகோ பிலமடத் ததிபரா யுயர்விசா கத்துதித்தே
உறுரங்க நாதசட கோபயதி சமயநெறி உபதேசித் தருளுங்குருவே
அலகா ரம்மடத் ததிபபூ ரட்டாதி யாய்வஸ்து துதியருளியோ
ராம்லக்ஷ்மி நரசிம்ம சடகோப யதியான அரியபர அம்ச குருவே
இகலார்ந் தம்மடத் தெதியாயுத் ராடநாள் எழுந்து திருமந்த்ர மீந்த
இணையில் ஸ்ரீரங்க சடகோபயதி யபிதான எம்பரமேஷ்டி குருவே
விலகாதும் மலர்ப்பாதம் பலகாலும் நிலையாக வேண்டுவே னுமதடிமையே
விரும்புவணம் தருமுமது விருசரண பக்தியது விளம்புதற் கரிதாமரோ.

॥ श्रीः ॥

जयति रंगशठारिगुरुर्महान् नृहरिभक्तिसुपूरितमानसः ।
यतिवरैरभिनन्दितपाटवश्शमदमादिगुणोदधिचन्द्रमाः ॥

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

“ योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥ ”

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ மதுராந்தகம் பாடஶாலை

ஸ்ரீ மதுராந்தகத்தில் நடைபெற்று வரும் பாடஶாலைக்கு இப்பொழுது கோடைகால ப்ரயுக்தமான விராமம் ஆரம்பித்திருக்கிறது. சென்ற பங்குனி மாஸக் கடைசியில் ஸாஹித்யம் ஶாஸ்த்ரம் இவைகளில் அந்வயித்திருந்த வித்யார்த்திகளுக்கு வார்ஷிக பரீக்ஷைகள் நடத்தப்பட்டன. இந்த வர்ஷத்தில் நடைபெறவேண்டிய ப்ரவசநமெல்லாம் முடிந்து, ப்ரவசந கர்த்தாக்களும் வித்யார்த்திகளும் தங்கள் தங்கள் க்ராமாதிகளுக்குப் புறப்பட்டுப் போய்விட்டார்கள். வேதம் ப்ரபந்தம் இவை மாத்ரம் இன்னும் நடந்துவருகின்றன. அவர்களுக்கு வைஶாகோத்ஸவ காலத்திலும், அதற்குப் பிறகு ஸ்ரீ மதுராந்தகத்தில் நடக்கும் ஆனி உத்ஸவ காலத்திலும், வார்ஷிக விராமம் உண்டு. அந்த ஆனி உத்ஸவம் முடிந்தவுடன், வரப்போகும் வர்ஷத்திற்காக மறுபடியும் ப்ரவசநம் யதாக்ரமம் உபக்ரமிக்கப்படும்.

மேல் அதிகாரிகளால் நடத்தப்பட்ட இவ்வர்ஷத்திய ப்ரவேஶக பரீக்ஷை சென்ற வாரத்தில் நடைபெற்றது. அதில் இந்தப் பாடஶாலையிலிருந்து எட்டு வித்யார்த்திகள் அந்வயித்திருந்தார்கள். அந்தப் பரீக்ஷையில் கேட்கப்பட்ட ப்ரஶ்நங்களுக்கு எல்லாரும் த்ருப்திகரமாக ஸமாதாநம் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. இதன் நிஷ்பத்தி வருகிற ஆனி மாஸத்தில் வெளிவரும். ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய அநுக்ரஹத்தால் எல்லாரும் அந்தப் பரீக்ஷையில் நிஷ்பத்தி பெற்று, அடுத்த வர்ஷத்தில் ஶிரோமணி பாகத்தில் சேர்ந்து, மேல்கொண்டு வித்யா ஸம்பாதநத்தைச் செய்வார்கள் என்று நம்புகிறோம். புதிதாக இதர ஸ்தலங்களிலிருந்து அடுத்த வர்ஷத்தில் இந்தப் பாடஶாலையில் சேர விரும்பும் வித்யார்த்திகளெல்லாரும் தமது ப்ரார்த்தநா பத்ரத்தைப் பாடஶாலையின் அத்யக்ஷ ஸ்வாமி விலாஸத்திற்கு ஆனி மாஸம் முதல் தேதிக்குமுன் அத்யக்ஷரிடம் வந்து சேரும்படி அனுப்பவேண்டும். தேஶிக ஸம்ப்ரதாயஸ்தர்களெல்லாரும் அதற்கு மனுச் செய்துகொள்ளலாம். யோக்யதாநுகுணம் ப்ரவேஶம் கொடுக்கப்படும்.

* * * * *

ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு சேலம் கோயம்புத்தூர் மைஸூர் பெங்களூர்,

முதலிய ப்ரதேஶங்களை உத்தேஶித்து யாத்ரையாக எழுந்தருளி யிருக்கிறார். வாங்கல், கரூர் மார்க்கமாக நாமக்கல் பர்யந்தம் எழுந்தருளின ஸமாசாரம் கிடைத்திருக்கின்றது. க்ரீஷ்ம கால மானதலும், ஸஞ்சரிக்கும் ப்ரதேஶம் மலை ப்ரதேமானதாலும், யாத்ரை கொஞ்சம் ஶ்ரம ஸாத்யமாக இருக்குமோவென்றும், அதனால் ஏதாவது ஶ்ரமம் ஏற்படுமோவென்றும் மனஸ்ஸில் ஶங்கை ஜனிக்கின்றது. ஆனால் ப்ரமத் ஸ்வ ஸாமர்த்ய சாமரனாக இருக்கும் லோகேஶ்வரன் ஸந்நிதானத்தில் தந்தஶூகங்கள் வரக்கூடுமோ? ப்ரஹ்ம லோகாதிகளான லோகங்களை ஸம்ரக்ஷிப்பதற்கும் அவிஶ்வஜநோப போக்யங்களான போகங்களைத் தரிப்பிப்பதற்கும் ஶக்தனான ஸ்ரீ ஶரண்யனை ஆஶ்ரயித்தவர்களைக் கஷ்டமென்பது எப்படி ஸ்பர்ஶிக்கும்? இருந்தபோதிலும் பல்லாண்டு பாடித் திரியும் ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய குலத்தில் பிறந்த தாஸர்கள்,

ஸ்ரீ அழகிய சிங்கரின் யாத்ரோத்ஸவம்

"यं पालयसि धर्मं त्वं धृत्या च नियमेन च ।
स वै त्वां मुनिशार्दूल धर्मस्समभिरक्षतु ॥"

என்று ப்ரார்த்தித்தே நிற்கிறார்கள்.

* * * * *

புதிய தாரண ஸம்வத்ஸரம் பிறந்து இன்று பதினைந்து நாட்கள் ஆயின. யுத்த ப்ரயுக்தமாக ஏற்பட்டுள்ள துர்ப்பிக்ஷத்தின் கடுமையை ஏற்கெனவே அநுபவித்துவரும் ஜனங்கள், "आपद्गमिष्यति भविष्यति भूतिकालः" என்று ஆஶம்ஸித்துக்கொண்டிருந்தார்கள். கர்ம கதியோ வேறுவிதமாக ப்ரவஹித்து, ஜனங்களுடைய ஆசையைப் பங்கம் செய்து விட்டது; அது மாத்ரமின்றி வாங்மநஸாகோசரமான விபத்தையும் விளைத்துவிட்டது. புதிய வருஷம் பிறந்த மறுதினமே (14—4—44) பம்பாய் நகரத்தில் பகல் 3 மணிக்கு, துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த கப்பலொன்றில் திடீரென்று பெரிய தீ உண்டாயிற்றாம். உடனே அங்கிருந்த வெடிகுண்டுகள் மஹத்தான சப்தத்துடன் வெடித்து நாலு பக்கங்களிலும் சிதறவே, ஸமீபத்திலிருந்த கட்டிடங்களெல்லாம் தீப்பிடித்து இரண்டு மூன்று மைல் விஸ்தீர்ணம் பரவிப் பட்டணத்தை நாஶம் செய்துவிட்டதாம். அகஸ்மாத்தாகத் தீப்பிடிப்பது உண்டு; வீடுகள் எரிவதுமுண்டு. இம்மாதிரி தீயின் கடுமையை ஒருவரும் இது பர்யந்தம் பார்த்ததுமில்லை கேட்டதுமில்லை. தீயை அணைப்பதற்கு வேண்டிய உபகரணங்கள் பஹுவாகக் கைவசமிருந்தும் அவை அபர்யாப்தங்களாகப் போய்விட்டனவாம். இரண்டொரு இடங்களில் இந்த உபகரணங்களைக்கொண்டு தீயை அணைக்க ப்ரயத்நப்பட்ட புருஷர்கள் தமது கருவிகளுடன் தீயால் ஆக்ரமிக்கப்பட்டு இருந்தவிடம் தெரியாமல் போய்விட்டார்களாம்.

பம்பாயில் தீ விபத்

தீ ஆரம்பித்து ஒரு வார பர்யந்தம் ஜ்வாலை ஓங்கி வளர்ந்துகொண்டிருந்ததென்றால், அதன் க்ரௌர்யம் எவ்வளவு என்பதை ஊஹித்துக்கொள்ளலாம். ஜனங்களெல்லாரும் ப்ரமம் அடைந்தவர்களாய்க் குழந்தை குட்டிகளை எடுத்துக்கொண்டு 'எவ்விடம் போகிறோம்?' என்பதை அறியாமலே வெகுதூரம் ஓடி மரத்தடியிலும் வீதிகளிலும் தங்கி ஆஹார மின்றிக்கே தபித்தார்களாம். ஓடித் தப்பித்துக்கொள்ளக் கூடாமல் தீயாற் சூழப்பட்டவர்களாயும், இடிந்த கட்டிடத்தின்கீழ் அகப்பட்டவர்களாயும் இருந்த கணக்கற்ற ஜனங்கள், உயிரிழந்து கரிக்கட்டையாகவும் சின்ன பின்னங்களான அங்கங்களை உடையவர்களாகவும் இப்பொழுது ஸ்தலங்களைத் தோண்டிப் பார்க்கும் காலத்தில் அகப்படுகிறார்களாம். பட்டணம் நாசம் அடைந்த இடத்தில் பாங்கிக் கட்டிடங்களும், பெரிய பத்ரிகை அச்சுக் கூடங்களும் பள்ளிக்கூடங்களும் இருந்தனவாம். எல்லாம் சாம்பராகிவிட்டன. பாங்கியில் பத்ரமாக வைக்கப்பட்டிருந்த முத்ரை போட்ட தங்கக் கட்டிகள் தீயின் வேகத்தால் சிதறி அடிக்கப்பட்டவைகளாய் வெகுதூரம் பாய்ந்து, வீட்டுக் கூரைகளிலும் வீதிகளிலும் புதைந்து கிடப்பதைப் போலீஸ்காரர்கள் பரிசோதித்து எடுப்பதாகப் பத்ரிகைகளில் ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். ஒரு மயிலுக்கப்பால் ஒரு வீட்டில் லக்ஷ ரூபாய் மதிப்புள்ள ஒரு தங்கக் கட்டி ராம பாணம்போல வெகு வேகத்துடன் கூரையைத் துளைத்துக்கொண்டு மாடியில் உட்கார்ந்திருந்த வீட்டுக்காரர் முன்னிலையில் வந்து விழுந்ததாகவும், அதைப் பார்த்து அந்த வீட்டுக்காரர் பயந்து போலீஸ்காரர்களைக் கூப்பிட்டு அவர்கள் வசம் அதை ஒப்புவித்ததாகவும் வ்ருத்தாந்தம் கேள்விப்படுகிறோம். இது இருக்கட்டும். நேற்று பர்யந்தம் நல்ல ஸ்திதியிலிருந்த குடும்பங்கள் இன்று தங்க இடமற்றவர்களாய் ஸ்த்ரீகளுடனும் குழந்தைகளுடனும் பட்டினியால் வருந்தித் தெருக்களில் நின்றுகொண்டு ச்ரமப்படுகிறார்களென்றால், இதைக் காட்டிலும் துக்ககரமான வ்ருத்தாந்தமுமுண்டோ? கருணாநிதியான பகவான் இம்மாதிரி ஸம்பவங்களை ஸங்கல்பித்தால் அது நம்முடைய ஜன்மாந்தர கர்மத்தின் பலமே.

* * * * *

அபசூத்ராதி கரணத்தில், 'ப்ரஹ்ம வித்யையில் [அதாவது உபாஸநமென்று சொல்லப்படும் மோக்ஷோபாயத்தில்] சூத்ரர்களுக்கு அதிகாரமுண்டா இல்லையா?' என்பதை விஸ்தாரமாக விசாரித்து, 'ப்ரஹ்ம வித்யையில் சூத்ரர்களுக்கு அதிகாரமில்லை; ஏனென்றால் அவர்களுக்கு அதற்கு வேண்டிய ஸாமர்த்யமிராததால்' என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. 'சூத்ரர்களுக்கு ஸாமர்த்ய மில்லையென்று எப்படிச் சொல்லக்கூடும்? ப்ரஹ்மோபாஸநம் கேவலம் மநோ வ்ருத்தி மாத்ரம் தானே! அந்த மநோ வ்ருத்திக்கு ப்ரஹ்ம ஸ்வரூப ஜ்ஞாநம் அந்த ப்ரஹ்ம உபாஸநா ப்ரகார ஜ்ஞாநம்

திவ்ய ப்ரபந்தாத்யயநமும் ப்ரஹ்ம வித்யாதிகாரமும்

இவை மாத்ரமே போதுமானவை யன்றோ? அந்த ஜ்ஞாநத்தை இதிஹாஸ புராண ஶ்ரவணத்தால் ஸம்பாதித்துக் கொள்ளக் கூடாதா? ஶூத்ரர்களுக்கு இதிஹாஸ புராண ஶ்ரவணத்தில் அநுஜ்ஞை இருக்கின்றதே!' என்று ஒரு ஆக்ஷேபம் உதிக்க, அதற்கு ஸமாதாநமாக "अध्ययनविधिसिद्धस्वाध्यायाधिगतज्ञानस्यैव ब्रह्मोपासनोपायत्वात्" [அத்யயந விதியிருந்து, அந்த விதியால் ஸித்த மான ஸ்வாத்யாயத்தைச் செய்து, அது வழியாக அடையப்படும் ஜ்ஞாநமே ப்ரஹ்மோபாஸநத்திற்கு உபாயமாகக் கூடும்] என்று ஸ்ரீ பாஷ்யத்தில் அநுக்ரஹிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது:—'வேதாநுவசநம் ப்ரஹ்மோபாஸநத்திற்கு அங்கம்' என்று சொல்லப்பட்டதாகிறது. இந்த விஷயத்தை "संस्कारपरामर्शात्तदभावाभिलापाच्च" என்னும் ஸூத்ரத்தால் ஸூத்ரக்காரர், 'உபநயநம் அவஶ்யம் அபேக்ஷிதமாகையால் அதை யுடைய த்ரைவர்ணிகர் களுக்கே ப்ரஹ்ம வித்யையில் அதிகாரம் லபிக்கும்; அது இராம லிருக்கும் ஶூத்ரர்களுக்கு அதிகாரம் கிடைக்கமாட்டாது' என்று விவரித்திருக்கிறார். ஸ்வாமி தேஶிகன் இதை விவரிக்குமிடத்தில், 'ஶூத்ரர்களுக்கு ப்ராஹ்மண்ய மிராத்தால் உபநயந மில்லை; உப நயந மிராததால் வேதாத்யயந மில்லை; அத்யயந மிராததால், வேதார்த்தத்தின் ஆபாத ப்ரதீதி இல்லை; ஆபாத ப்ரதீதி யிராத தால் ஆபாத ப்ரதீதியை விஶதமாக விளக்கும் [அதாவது: உப ப்ருஹ்மணமாக இருக்கும்] பாரதாதிகளுக்கு அவகாஶம் ஏது?' என்பதை நன்றாக ஸூசிப்பித்திருக்கிறார்: "वेदार्थापातबुद्धिर्यदनधिकरणा नोपबृंह्येत तैस्सः" [வேதார்த்தாபாத ஜ்ஞாநம் எவனுக்கு இல் லையோ, அவன் இதிஹாஸ புராணங்களால் விஶத ஜ்ஞாநமுடைய வனாக எப்படிச் செய்யப்படுவான்?] வேதாத்யயந வழியாக அடை யப்படாமல் வேறு மார்க்கமாக அடையப்படும் ஜ்ஞாநத்தை உடை யவர்கள் "विकलधियः" [அல்ப ஜ்ஞாந முடையவர்கள்] என்றும் அவர்களுக்கு[न हि विकलधियां स्यादुपासाधिकारः] உபாஸநாதிகார மில்லை யென்றும் அவ்விடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் 'பாரதம் முதலிய உப ப்ருஹ்மண க்ரந்தங்கள் வேதாத்யயநத்தால் ஏற்படும் ஆபாத புத்தியை விஶதமாகச் செய்வதற்கு மாத்ரம் உபாயமாகுமே தவிர்த்து, அவை ஸ்வதந்த்ரமாக ப்ரஹ்மோபா ஸநத்திற்குத் தேவையான ஜ்ஞாநத்தைக் கொடுப்பதற்கு ஶக்தி யற்றவை' என்பது ஸித்தமாயிற்று. ஆகையால், 'ஒருவன் ப்ரஹ் மோபாஸநத்தில் ப்ரவர்த்திக்க இச்சித்தானே யானால், அவன் முதல் முதலில் வேதத்தை அத்யயநம் செய்யவேண்டும்; பிறகு, அந்த அத்யயநத்தால் ஏற்படும் ஆபாத புத்தியைப் பாரதம் முதலிய உபப்ருஹ்மண க்ரந்தங்களால் விஶதமாகச் செய்துகொள்ள வேண் டும்; அப்படி விஶதமாகச் செய்யப்பட்ட ஜ்ஞாநத்தைக்கொண்டே உபாஸநத்தில் ப்ரவர்த்திக்க வேண்டும்' என்பது ஸித்தம்.

இப்பொழுது ஒரு ஸம்ஶயம் எழுகின்றது. அது என்ன வென்றால்:—'திவ்ய ப்ரபந்தங்கள் தத்வங்களைத் தெளிவாக ப்ரதி

பாதிக்கின்றன. ஒரு ப்ராஹ்மணன், தனக்கு ப்ராஹ்மண்யம் இருக்கையிலும் வேதாத்யயநத்தில் ப்ரவர்த்திக்காதவனுய்த் திவ்ய ப்ரபந்தங்களை ஸேவித்து அவைகளிலிருந்து ப்ரஹ்ம ஸ்வரூப தஷுபாஸந ப்ரகார ஜ்ஞாநத்தைப் பூர்ணமாகப் பெறுகின்றான். அந்த ஜ்ஞாநம் ஸ்வதந்த்ரமாக ப்ரஹ்மோபாஸநத்திற்கு உபாயமாகுமா? இல்லையா?' என்பதுதான். 'अध्ययनविधिसिद्धस्वाध्यायाधिगतज्ञानस्यैव ब्रह्मोपासनोपायत्वात्' என்று ஸ்ரீ பாஷ்ய பங்க்தி இருக்கின்றதே! "स्वाध्यायोऽध्येतव्यः" என்பதுபோல 'திவ்ய ப்ரபந்தத்தை அத்யயநம் செய்தல்வேண்டும்' என்று விதி இருக்கின்றதா? திவ்ய ப்ரபந்தத்தின் அத்யயநம் அப்படிப்பட்ட விதியால் ஸித்தமென்று சொல்லக்கூடுமா? அந்த அத்யயநத்தால் அடையப்படும் ஜ்ஞாநமும் வேதாத்யயநத்தால் அடையப்படும் ஜ்ஞாநம்போல் ஸ்வதந்த்ரமாக ப்ரஹ்மோபாஸநத்திற்கு உபாயமாகுமா? இல்லாவிட்டால், பாரதாதிகள் போலக் கேவலம் உபப்ருஹ்மணமாக இருந்து கொண்டு, வேதாத்யயநத்தால் ஏற்படும் ஆபாத ப்ரதீதியை விசதமாகச் செய்து அது வழியாக மாத்ரம் உபகாரகமாகின்றதா? திவ்ய ப்ரபந்தமும் ஸ்வதந்த்ரமாக உபாயமாகக் கூடுமென்றால், அதற்கு 'अध्ययनविधिसिद्धस्वाध्याय' என்னும் ஸ்ரீ பாஷ்ய வாக்யமும், "वेदार्थपातबुद्धिः" என்னும் ஸ்ரீ தேஶிகனுடைய திவ்ய ஸூக்தியும் இடம் கொடுக்குமோ? இடம் கொடுக்குமென்று சொன்னால், ப்ரபந்தாத்யயநம் ஶூத்ரர்களுக்கும் அநுமதமாகையால், ப்ரபந்தாத்யயநத்தின் வழியாக ஶூத்ரர்களுக்கும் ப்ரஹ்மோபாஸநத்தில் அதிகாரம் ப்ரஸங்கிக்குமே! அது அபஶூத்ராதிகரண ஸித்தாந்தத்திற்கு விருத்தமன்ரு? இந்த ஸந்தேஹத்தை ஶாஸ்த்ரஜ்ஞர்கள் தெளிவிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிரோம். இவ்விடத்தில் ப்ரஹ்மோபாஸநாதிகாரத்தைப் பற்றியே விசாரம்; மோக்ஷோபாயத்தைப் பற்றியில்லை. ப்ரபத்தி என்னும் மோக்ஷோபாயம் ஸர்வாதிகாரமென்பது நமது ஸித்தாந்தமானதால், எல்லாரும் அந்த உபாயத்தின் வழியாக மோக்ஷத்திற்கு அதிகாரியாவார்கள் என்பதில் ஆக்ஷேபமில்லை.

* * * *

ஸ்ரீ வில்லிவலம் ஸ்வாமியின் 'பகவத் விஷயம்'

ஸ்ரீ. உப. வில்லிவலம் நாராயணசார்ய ஸ்வாமி சென்ற ஸஞ்சிகையில் ஸ்ரீபகவத் விஷயம் என்னும் தலைப்பின் கீழ் வ்யாஸமொன்றை எழுதியிருக்கிறார். அதில் பின்வருமாறு சில பங்க்திகள் காணப்படுகின்றன:—"சில விஷமிகளால் நவீநர்களால் பதிப்பிக்கப்பட்ட ஈட்டில் சில பங்க்திகள் துர்க்கடங்களாக இருக்கலாம்.....எந்த எந்த இடங்கள் ப்ரக்ஷிப்தங்கள் என்பது ப்ராசீந கோஶ ஸாஹாய்யத்தாலே இப்பொழுதும் ஸூக்ஷ்ம புத்திகளுக்கு ஸுவிஶதமே அறியக்கிடக்கின்றது."

இவர் இம்மாதிரி எழுதுவதற்கு ப்ரகரணமென்னவென்றால் "நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத்திருவீதிப்பிள்ளை முதலிய பூர்வாசார்யர்களால் அருளிச்செய்யப்பட்ட ஒன்பதினாயிரப்படி ஈடு முதலிய க்ரந்தங்கள் சிலருக்கு அநாதரணீயங்களாக இருக்கின்றன" என்பதை ப்ரஸ்தாவித்துவிட்டு, அப்படி அவை அநாதரணீயங்களாக இருப்பதற்குக் காரணத்தைத் தேடும்பொழுது, அவைகளிற் சிற்சில விடங்களில் தென்படும் அதிவாத ரூபமாயுள்ள ஸ்ரீஸூக்திகள் ஒருகால் இதற்குக் காரணமாக இருக்கலாமோவென்று ஒரு ஶங்கையைச் செய்துகொண்டு, அதற்குப் பரிஹாரமாக, 'அப்படி அதிவாத ரூபமாகத் தென்படும் ஸ்ரீஸூக்திகள், அந்த க்ரந்தத்தைப் புதிதாகப் பதிப்பித்த சில "விஷமிகளால்" சேர்க்கப்பட்டவையாக இருக்கலாமாகையால், அவைகளை மாத்ரம் காரணமாகக்கொண்டு அந்தப் பூர்வாசார்யர்களுடைய க்ரந்தங்களை அநாதரிப்பது உசிதமாகமாட்டாது' என்று நிர்ணயித்திருக்கிறார். இதுதான் ப்ரகரணம்.

இதில் இவரால் விசாரிக்கப்பட்டிருக்கும் விஷயங்களைப் பற்றி நாம் குணதோஷ பரிஶீலநம் செய்ய ப்ரவர்த்திக்கவில்லை. பூர்வாசார்யர்களுடைய க்ரந்தங்களில் அதிவாதம் இருக்கின்றதோ இல்லையோ? அவைகளைப் பதிப்பித்தவர்கள் சில வாக்யங்களைப் புதிதாகச் சேர்த்திருக்கிறார்களோ? இல்லையோ? இவை முதலியவைகளை வேறு அவகாஶம் ப்ராப்தமாகும்பொழுதே ப்ருதக்காக விசாரித்தல் வேண்டும். இப்பொழுது அடியேன் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டுவது ஒன்றே. அதாவது:—வ்யாஸம் எழுதும் ஸ்வாமிகள், பிறருடன் தமக்குள்ள அபிப்ராய பேதத்தை வெளியிடும் காலத்தில் க்ரூரமான பதப்ரயோகங்களாலாவது, அல்லது அவஜ்ஞா ஸூசகங்களான அர்த்தாவிஷ்கரணங்களாலாவது பிறரை நிந்தியாமல் தமது அபிப்ராய பேதத்தை மாத்ரம் வெளியிடுவதே உசிதமாக இருக்கும் என்பதுதான். ஸ்ரீ வில்லிவலம் ஸ்வாமி, 'விஷமிகள்' என்பது போன்ற பதங்களையும் மற்றவர்களுக்கு அவஜ்ஞாஸூசகங்களானச் சில அர்த்தவிஶேஷங்களையும் வர்ஜித்திருந்தால் அது ஶோபநமாக இருந்திருக்கும்; ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியைக்கு மாலிந்யமும் நேர்ந்திருக்கமாட்டாது.

மதிப்புரை

"இராமாநுசன்" என்னும் பெயருடைய ஒரு சிறிய புஸ்தகம் வரப்பெற்றோம். இது திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்கக் கார்யதரிசி தமிழ்வித்வான் பந்தல்குடி ஸ்ரீ. உ.ப. திருமலை ஐயங்கார்ஸ்வாமியால், திருமயிலை ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் ஸந்நிதியில் நடைபெற்ற ஸ்ரீ பாஷ்யகாரருடைய உத்ஸவத்தில் எட்டாவது திருநாளான 25—4—44-ல் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் மறுபதிப்பு. இதில் திருவரங்கத்தமுதனார், ஸ்ரீநிகமாந்த மஹாதேஶிகன் ஸ்ரீ மணவாள மாமுனிகள் போன்ற பெரியோர் ஸ்ரீராமாநுஜனைப் போற்றியிருக்கும் ப்ரகாரத்தை அவரவர்களுடைய திவ்ய ஸூக்திகளைக்கொண்டு ஸ்ரீபந்தல்குடி ஸ்வாமி வெகு அழகாக எளியதமிழில் விவரித்திருக்கிறார். இதைப் பெறும் இடம்:—15 கணபதிமுதலித்தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

कुर्माणि जिजीविषेच्छतं समाः [நூறு வர்ஷம் ஜீவித்திருக்கவேண்டுமானால், கர்மங்களைச் செய்துகொண்டே அப்படி ஜீவித்திருக்க இச்சித்திரு] என்னும் வாக்யத்தில் யாவதாயுஷம் கர்மத்தைச் செய்துகொண்டிருத்தல் வேண்டுமென்று விதிக்கிறபடியால், 'கர்மமே ப்ரதாநம்; அதுவே ஸாக்ஷாத் மோக்ஷ ஸாதந' மென்று கர்மத்திற்கு ப்ராதாந்யம் சொல்லப்படுகிற தன்றோ? தனது கக்ஷிக்கு அநுகூலமாகப் பூர்வபக்ஷி கூறும் லிங்கங்களுள் இது முக்யமானது. ஏனென்றால், இந்த வாக்யம் ஆத்மஜ்ஞாநமுள்ளவனை அந்த ஜ்ஞாநத்திலிருந்து திருப்பி யாவஜ்ஜீவம் கர்மாநுஷ்டாநத்தில் நியமிக்கிறதுபோலத் தோன்றுகின்ற தன்றோ? இம்மாதிரியான லிங்கங்களை ஆதாரமாக அவலம்பித்து, 'கர்மாநுஷ்டாநத்தாலேயே புருஷார்த்தம் லபிக்கக்கூடும்; வித்யை கேவலம் கர்மத்திற்கு உபகாரகம்' என்று பூர்வபக்ஷிகள் நிர்ணயிக்கிறார்கள்.

இவைகளுள் ஐந்தாவது லிங்கத்திற்கு விஷயமாகிற வாக்யத்தின் அர்த்தத்தின் விசாரமே இங்கு ப்ரஸ்துதம். ஆனாலும், மற்றை ஶங்கைகளுக்கும் ஸித்தாந்திகள் என்ன ஸமாதாநங்களைச் சொல்லுகிறார்கள் என்பதை ஸங்க்ரஹமாகச் சொல்லிவிட்டு, பிறகு ப்ரஸ்துத விசாரத்தை எடுத்துக்கொள்வோம். (1) 'तत्त्वमसि' இத்யாதியான வாக்யங்களில் ப்ரஹ்மத்திற்கும் ஜீவனுக்கும் ஸாமாநாதிகரண்யம் சொல்லப்படுகிறபடியால் 'ப்ரஹ்ம' ஶப்தம் ஜீவனைக் குறிக்கிறதென்று சொல்லக்கூடுமென்றும், ஆகையால் ப்ரஹ்ம ஜ்ஞாநம் என்பது க்ரதுகர்த்தாவாக இருக்கும் ஜீவாதி ஸ்வரூபத்தின் ஜ்ஞாநமேயாகலாமென்றும், அந்த ஜ்ஞாநம் அந்த ஜீவாத்மாவுக்கு ஒரு ஸம்ஸ்காரத்தைச் செய்துகொண்டு அது வழியாகக் கர்மத்திற்கு ஶேஷமாகின்றதென்றும், அவ்விடத்தில் புருஷார்த்தமொன்று பலமாகச் சொல்லப்பட்டிருக்கின்றதே என்றால் அது கேவலம் அர்த்தவாதமேயென்றும், இவ்வாறன்றோ பூர்வபக்ஷிகள் வாதிக்கிறார்கள்? இது அநுபபந்நம். வேத்யம் [முமுக்ஷுவால் அறியப்படவேண்டியது] என்று சொல்லப்படும் ப்ரஹ்மமானது, கர்ம கர்த்தாவாகிற ஜீவனைக்காட்டிலும் வேறுபட்ட பொருளே; ஏனென்றால், 'அந்த வேத்யமான ப்ரஹ்மம் ஹேய குணத்திற்கு ப்ரத்யநீகம்; அநவதிகாதிஶய கல்யாண குணாகரம்; ஸ்வ ஸங்கல்பத்தாலே மாத்ரம் ஜகத்தின் உத்பவம் ஸ்திதி லயம் இவைகளைச் செய்கின்றது; அது ஸர்வஜ்ஞம், ஸர்வஶக்தி, வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எட்டாத ஆநந்தத்தை உடையது; ஜீவன்களுக்கு அதிபன்; ஸகலத்திற்கும் நியந்த்ரு' இவ்வாறு உபநிஷத் வாக்யங்கள் உத்கோஷிக்கின்றன. அந்த வாக்யங்களில் ஜீவனுக்கு இந்தக் குணங்களின் கந்தம் இருப்பதாகக்கூடச் சொல்லப்படவில்லை. ஆகையால் வேத்யமாகச் சொல்லப்படும் ப்ரஹ்மமானது க்ரது கர்த்தாவாகிற ஜீவாத்மாவின் ஸ்வரூபமே என்று சொல்வதற்கு உபபத்தி யொன்றுமில்லை. ஆகையால் பரமபுருஷனை விஷயமாக உடைய வித்யைக்கு அவ்வவ்விடங்களிற் சொல்லப்பட்டுள்ள தத் ப்ராப்தி ரூபமான அம்ருதத்வ பலஶ்ரவணம் அர்த்தவாதமாகமாட்டாது.

(2) ப்ரஹ்மவித்துக்கள் யாவஜ்ஜீவம் கர்மங்களை அநுஷ்டித்துக் கொண்டு வந்தார்கள் என்னும் காரணத்தால் 'கர்மமே மோக்ஷத்திற்குக் காரணம், வித்யை அதற்கு அங்கம்' என்று சொல்வதும் உபபந்நமன்று. கர்மங்களைச் சில ப்ரஹ்மவித்துக்கள் அநுஷ்டித்தார்கள் என்று தெரிவது போல வேறு சில ப்ரஹ்மவித்துக்கள் கர்மங்களை விட்டிருக்கிறார்களென் றும் தெரிகின்றது "ऋषयः कावषेयाः 'किमर्था वयमध्येष्यामहे ?' किमर्था वयं यक्ष्यामहे ? [காவஷேயர்கள் என்று சில ப்ரஹ்ம வித்துக்கள் உண்டு. அவர்கள் 'எதற்காக நாங்கள் அத்யயநம் செய்யவேண்டும்? என்ன ப்ரயோஜநத்தை உத்தேசித்து நாங்கள் யாகங்கள் செய்யவேண்டும்?' என்று கேட்டார்கள்] என்று கர்மங்களுடைய அநாசார தர்ஶநமும் இருக்கிறபடியால் கர்மங்களே ஸாக்ஷாத் புருஷார்த்தஹேதுவென்று சொல்வது சரியன்று.

(3) "यदेव विद्यया करोति तद् वीर्यवत्तरं भवति" [எந்தக் கர்மமானது வித்யையை ஸாதநமாகக்கொண்டு செய்யப்படுகிறதோ அது வீர்யவத்தர மாகின்றது] என்னும் வாக்யத்திலிருந்து வித்யை கர்மத்திற்கு அங்கம் என்று ஏற்படவில்லையா? என்பது பூர்வபக்ஷிகளின் மூன்றாவது கேள்வி. இந்த வாக்யம் "उद्गीथमुपासीत" என்று உத்கீத வித்யை ப்ரஸ்தாவிக்கப்படு மிடத்தில் காணப்படுகின்றது. ஆகையால் 'यत्' [எது] என்பது ப்ரஸ்துதமான அந்த உத்கீத வித்யையே நிர்த்தேஶிக்கவேண்டும்; மற்றை வித்யைகளுக்கு இவ்விடத்தில் அந்வய மில்லை. இதுதான் ஸமாதாநம். கிஞ்ச: வாக்யத்தில் பதங்களின் அந்வயத்தையும் கவனிக்க வேண்டும். 'எந்தக் கர்மாவைச் செய்கிறானோ அந்தக் கர்மாவை வித்யையை ஸாதநமாகக்கொண்டு செய்ய வேண்டும்' [यत्क्रियते तद्विद्यया] என்று அந்வயம் இருந்தால், அப்பொழுது இது ஸர்வ வித்யைகளுக்கும் ஸாதாரணமென்று சொல்லலாம். இவ்விடத்தில் அப்படியில்லை. 'எது வித்யையை ஸாதநமாகக்கொண்டு செய்யப்படுகின்றதோ, அது வீர்யவத்தரம்' என்று வித்யையைக் கொண்டு செய்யப்படும் கர்மம் வீர்யவத்தர மாகும் என்று மாத்ரம் சொல்லப்படுகின்றது. கிஞ்ச: 'यदेव' [யாதொன்று] என்பதிலுள்ள 'एव' என்பது ஒரு ப்ரஸித்தமான நிர்த்தேஶத்திற்கு ஸூசகம். அப்படிப்பட்ட ப்ரஸித்தி ப்ரஸ்துதமான உத்கீத வித்யைக்கு மாத்ரம் ஸம்பவிக்கு மாகையால், இவ்விடத்திற் சொல்லப்படும் கர்மஶேஷத்வம் வித்யாஸாமாந்யத்திற்கு உண்டு என்று நிர்ணயிக்க ஹேதுவில்லை.

(4) 'இவ்விடத்திலிருந்து போகும் ஜீவனை வித்யை கர்மம் இரண்டும் சேர்ந்து தொடர்ந்து போகின்றன' [तं विद्याकर्मणी समन्वारभेते] என்று சொல்லப்பட்டிருக்கும் ஸாஹித்யம், அவை யிரண்டும் பரஸ்பரம் ஸம்பந்தப்பட்டே போகின்றன வென்பதை நியமிக்கின்றது என்று சொல்வதும் சரியன்று. வித்யை தனது பலத்தைக் கொடுப்பதற்கும், கர்மம் தனது பலத்தைக் கொடுப்பதற்கும் புருஷனைத் தொடரக்கூடு மாதலால், அவை யிரண்டுக்கும் பிரியக்கூடாத ஒரு ஸம்பந்தத்தை அது ஸூசிப்பிக்கின்றது என்று கொள்வதற்கு இடமில்லை.

(5) வேதத்தை அத்யயநம் செய்தவனுக்கே கர்மங்கள் விதிக்கப் படுகின்றன வென்பதிலிருந்து 'வேதாத்யயநம் முந்தியது; கர்மாநுஷ் டாநம் பிந்தியது' என்று ஏற்படுகின்றது என்பது சரியே. ஆனால் அந்த அத்யயநம் அர்த்தாவபோதத்துடன் செய்யப்படும் அத்யயநத்தையே குறிக்கின்றது என்று சொல்ல இடமில்லை. அத்யயந மென்பது நியமத் துடன்கூடிய அக்ஷரராஸி க்ரஹணமாத்ரத்தையும் குறிக்கும். அப்படி அத்யயநம் செய்தவன் அதனால் ஸம்பவிக்கும் ஸாமாந்ய ஜ்ஞாநத்தைக் கொண்டு ஸ்வயமே மீமாம்ஸா ஶ்ரவணத்தில் ப்ரவர்த்திக்கக்கூடு மன்றோ? நிற்க: வேதத்தின் அர்த்தத்தை அறிவது ஒன்று; ப்ரஹ்ம வேதநம் ப்ரஹ்மோபாஸநம் என்பது மற்றொன்று. கேவலம் அர்த்த ஜ்ஞாநம் கர்மத்திற்கு ஶேஷமானாலும் உபாஸந ரூபமான வித்யை கர்மங்களுக்கு அங்கமென்று சொல்ல முடியாது.

(6) ப்ரஸ்துதமான கடைசி லிங்கத்தை எடுத்துக்கொள்வோம். இந்த வாக்யத்தில் யாவதாயுஷம் கர்மங்களைச் செய்யவேண்டுமென்று விதிக்கப்படுகின்றது என்பதை ஒத்துக்கொள்ளுகிறோம். ஆனால், கர்மங்க ளுள், இருவகைகள் உண்டு. அவை, பலத்தை உத்தேஶித்துச் செய்யப் படும் கர்மங்கள், பலாபி ஸந்தியின்றிக்கே ப்ரஹ்ம வித்யைக்கு அங்கமாகச் செய்யப்படும் கர்மங்கள் என்பன. இவைகளுள் எந்தக் கர்மங்களைப்பற்றி இந்த வாக்யம் பேசுகின்றது என்பதை நிர்ணயிக்க ஒரு அடையாளமும் இல்லை. பூர்வபக்ஷிகள் முதல் வகைக் கர்மங்களையே இது விவக்ஷிக் கின்றது என்று சொல்லுகின்றார்கள். அப்படி நிர்ணயிப்பதற்கு விஶே ஷித்த ஹேது ஒன்றுமில்லை யாதலால், இது இரண்டாவது கர்மங் களைப்பற்றியே பேசுகின்றது என்பது ஸித்தாந்திகளின் நிர்ணயம்.

இந்த மந்த்ரத்திற்குப் பூர்வபக்ஷிகள் சொல்லும் அர்த்தமாவது: "யாவஜ்ஜீவம் காம்ய கர்மங்களை அவைகளின் பலத்தை உத்தேஶித்து எல்லாரும் அநுஷ்டித்தல் வேண்டும். இப்படியே உன்னிடத்தில் கர்மங் களைச் செய்யவேண்டா மென்னும் ப்ரகாராந்தரம் இல்லை. இப்படியானால் 'காம்ய கர்மாநுஷ்டாநத்தில் சில நிஷித்தாநுஷ்டாநங்கள் ஸம்ப விக்குமே; அவை விதி பலத்தால் உத்தேஶித்த பலத்தைக் கொடுத் தாலும் நிஷேத பலத்தால் ப்ரத்யவாயமும் ப்ரஸங்கிக்குமே' என்று ஶங்கிப்பாயோ? அஶுத்த மென்னும் ஶங்கை வேண்டாம். ஶப்தம் அவ்விதம் சொல்லியிருக்கிறபடியால் [अशुद्धमिति चेन्नशब्दात्] என் கிறபடி ப்ரத்யவாய லேஶ ப்ரஸக்தியுமில்லை." இதுதான் பூர்வபக்ஷி கள் சொல்லும் அர்த்தம். ஸித்தாந்திகள் சொல்லும் அர்த்த மென்ன வென்றால்: "கர்மங்களைப் பலாபிஸந்தியின்றிக்கே யாவஜ்ஜீவம் செய் தல் வேண்டும். இப்படிச் செய்வதுதான் உனக்கு ப்ராப்தம். வேறொரு ப்ரகாரமும் சரியன்று. பலத்தை உத்தேஶியாமல் கர்மங்களைச் செய்யும் உன்னிடத்தில் அந்தக் கர்மங்கள் பந்தகங்களாகமாட்டா. [नर என்பதற்கு 'ஸங்கழற்றிருக்கும்' न रमत इति नरः அதாவது: பலாபிஸந்தி இன்றிக்கேயிருக்கும் என்பது பொருள்.] இது தான் ஸித்தாந்திகள்

சொல்லும் அர்த்தம். 'கர்மமே புருஷார்த்தத்தைக் கொடுக்கின்றது' என்பதற்கு 'யாவஜ்ஜீவம் கர்மங்களைச் செய்துவா' என்னும் இந்த வாக்யத்தை ஸாதகமாகப் பூர்வபக்ஷி உதாஹரித்தான். 'இந்த வாக்யத்திற்கு நீ சொல்வது அர்த்தமன்று; 'யாவஜ்ஜீவம் உபாஸநாங்கமான வர்ணாஶ்ரம தர்மத்தைவிடாது அநுஷ்டித்துவா' என்பதே பொருள். அதாவது: உபாஸநத்திற்கு அங்கமாயுள்ள கர்மங்களை ஒருபொழுதும் விட்டுவிடாதே' என்பதுதான் இதன் அர்த்தமாகையால் 'உபாஸநமே புருஷார்த்தத்தைக் கொடுக்கின்றது. கர்மாநுஷ்டாநம் அதற்கு அங்கம் என்பதே இதனால் ஏற்படுகின்றது' என்பது ஸித்தாந்திகளின் நிர்ணயம்.

இந்த மந்த்ரத்தை அர்த்தம் செய்யும் விஷயத்தில் ஸ்ரீ வ்யாஸர் 'வேறுவிதமாகவும் ஒரு யோஜனை செய்யக்கூடும்' என்று மற்றொரு ஸூத்ரத்தை அநுக்ரஹித்திருக்கிறார். அதாவது: "स्तुतयेऽनुमतिर्वा" என்பதுதான். இதன் பொருளாவது; 'பலாபிஸந்தி யின்றிக்கே கர்மங்களைச் செய்வதன் வைபவத்தைப் புகழும்பொருட்டு இவ்விடத்தில் கர்மங்களைச் செய்ய அநுமதி கொடுக்கப்படுகின்றது' என்பதுதான். 'நீ எவ்வளவு காலம் கர்மங்களைச் செய்தாலும் செய்யலாம். வித்யா மாஹாத்ம்யத்தால் அந்தக் கர்மங்கள் உன்னைக் கட்டுப்படுத்தமாட்டா' என்று அநுமதி கொடுப்பதானது இது வித்யாப்ரகரண மாதலால் வித்யையின் ஸ்துதியின் பொருட்டே ஆகுமன்றோ? முதல் மந்த்ரத்தில் 'ईशावास्यमिदं सर्वम्' [இதெல்லாம் பகவானால் வ்யாபிக்கப்பட்டிருக்கின்றது] என்று வித்யை உபக்ராந்தமாக இருக்கிறபடியால், அந்த வித்யையைப் புகழ்வது ப்ரகரணத்திற்கு ஒத்ததே. இதுதான் இந்த இரண்டாவது ஸூத்ரத்தை இயற்றின வ்யாஸ பகவானுடைய திருவுள்ளம். பூர்வபக்ஷி சொல்லுகிறபடி இந்த இரண்டாவது மந்த்ரம் 'யாவஜ்ஜீவம் கர்மங்களைச் செய்து வா' என்னும் பொருள் கொண்டதானால், வித்யையைப்பற்றிப் பேசிவரும் ப்ரகரணத்திற்குக் கர்மங்களைப்பற்றிப் பேசுவது விருத்தமாகும் என்பதைக் காண்பிக்கவேண்டு மென்பதும் திருவுள்ளமாக இருக்கலாம். இந்த இரண்டாவது யோஜனையில் 'कुर्वन्नेव' இத்யாதியான வாக்யம் 'கர்மங்களைச் செய்யலாம்' என்று கேவலம் அநுமதியைக் கொடுக்கின்றது. முதலில் விளக்கப்பட்ட யோஜனையில் 'வர்ணாஶ்ரம தர்மங்களை யாவஜ்ஜீவம் செய்' என்று கர்மாநுஷ்டாநத்தை விதிக்கின்றது. இது இரண்டு ஸூத்ரங்களுக்கு முள்ளவிஶேஷம். இந்த இரண்டு யோஜனைகளே ஸமஞ்ஜஸங்கள்; பூர்வபக்ஷியின் யோஜனை ப்ரகரணத்திற்கு அத்யந்த விருத்தமாயிருப்பதுடன் வேறு காரணங்களாலும் அதிமாத்ரம் அஸங்கதமாகையால் 'கர்மங்கள் ஸாக்ஷாத்தாகப் புருஷார்த்தப்ரதங்கள்; வித்யை அவைகளுக்கு அங்கம்' என்னும் பூர்வபக்ஷிகளின் கக்ஷிக்குஇந்த மந்த்ரம் ஸாதகமாகமாட்டாது என்பது ஸித்தம்.

இந்த உபநிஷத்தில் வேறு சில மந்த்ரங்களும் விசாரார்ஹங்களாக இருக்கின்றன. அவைகளை அவஸரம் ப்ராப்தமாகும்பொழுது பரக்க வசாரிப்போம்.

ஸ்ரீ:

'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா'வின் 1944-ஏப்ரல் மாதத்துச் சந்தா வஸூலில்.

1943-ம் ஆண்டுச் சந்தா

				ரூ.	அ.
174	ஸ்ரீ	T. V. க்ருஷ்ணையங்கார், மதுரை	...	3	0
210	,,	S. ரங்கஸாமி ஐயங்கார், குளித்தலை	...	3	0
236	,,	V. K. நரஸிம்ஹாசார்யர், குண்டக்கல்	...	3	0
248	,,	K. நம்பி ஐயங்கார், திருநெல்வேலி	...	3	0
270	,,	R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கடலூர்	...	3	0
408	,,	V. சேஷாத்ரியாசார்யர், வந்தவாசி	...	3	0
445	,,	B. T. சேஷாத்ரியாசார்யர், பாலூர்	...	3	0
477	,,	M. கோபாலதேசிகாசார்யர், மேல்மா	...	3	0
588	,,	K. ஸ்ரீநிவாஸையங்கார், திருச்சி (1942 & 43)	...	6	0

1944-ம் ஆண்டுச் சந்தா

29	ஸ்ரீ	V. ரங்கஸாமி ஐயங்கார், திண்டிவனம்	...	3	0
59	,,	A. ரங்காசார்யர், காரைக்குடி	...	3	0
61	,,	L. ஸ்ரீராமாசார்யர், ஆரணி	...	3	0
105	,,	V. வரதரகுநாதாசார்யர், திருவனந்தபுரம்	...	3	0
135	,,	T. மாணிக்க நாயகர், செவ்வாய்ப்பேட்டை, சேலம்	...	3	0
149	,,	T. S. நம்பி ஐயங்கார், திருவனந்தபுரம்	...	3	0
188	,,	R. R. சாரி, சைதாப்பேட்டை	...	3	0
200	,,	H. R. ரங்கஸாமி ஐயங்கார், பத்ராவதி	...	3	0
211	,,	V. E. க்ருஷ்ணமாசார்யர், சின்ன காஞ்சீபுரம்	...	3	0
233	,,	M. S. ராஜகோபாலன், உத்தர்ப்பூரா	...	3	0
236	,,	V. K. நரஸிம்ஹாசார்யர், குண்டக்கல்	...	1	0
246	,,	M. S. விஜயராகவாசார்யர், சோகத்தூர்	...	3	0
278	,,	வாத்யார் சேஷாத்ரி அய்யங்கார், திருக்கண்ணமங்கை		3	0
293	,,	K. ஸுந்தரமையங்கார், சாத்தூர்	...	3	0
298	,,	R. சக்ரவர்த்தி ஐயங்கார், விருத்தாசலம்	...	3	0
468	,,	M. C. துரைராஜன், பார்க் டவுன், சென்னை	...	3	0
501	,,	தட்டை அநந்தாசார்யர், தாமல்	...	3	0
515	,,	V. S. ஸ்ரீநிவாஸையங்கார், ஸ்ரீரங்கம்	...	3	0
582	,,	A. C. சடகோபாச்சாரியர், ஒலக்கூர்	...	1	8
588	,,	K. ஸ்ரீநிவாஸையங்கார். திருச்சி	...	3	0
589	,,	T. S. க்ருஷ்ணையங்கார், கொச்சி	...	3	0
591	,,	M. R. வேங்கடக்ருஷ்ணமாசார்யர், மேலப்பாளையம்		3	0
592	,,	செல்லமையங்கார், மணவாசி	...	3	0
593	,,	O. R. ராகவாசார்யர், மணப்பாறை	...	3	0
594	,,	S. ராஜகோபாலையங்கார், வண்டலூர்	...	3	0

ஸ்ரீ:

விற்பனைக்குத் தயாராயுள்ள புஸ்தகங்கள்

1. ந்யாஸோல்லாஸம் அணா இரண்டு
2. புகழ் மாலை II ரூபாய் ஒன்று
3. புகழ் மாலை IV ரூபாய் ஒன்று
4. புகழ் மாலை V அணா எட்டு
5. புகழ் மாலை VI அணா பத்து

: கிடைக்கும் இடம் :

வங்கீபுரம், காருகுரிச்சி, கே. டி. ஸ்ரீ சுந்தரராஜாசார்யன், பி.ஏ., எல்.டி.

Karaikurichi, P. O. :: *(via) Shermadevi S.I.R. Tinnevelly Dt.*

Regd. No. M. ***4437***

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்
விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

	சந்தாதாரர்கள் ரூ. அ. பை	மற்றவர்கள் ரூ. அ. பை
1. அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8—0	7—8—0
2. ௸ (பைண்டில்லாதது) ...	5—8—0	6—8—0
3. உக்திநிஷ்டாபரணம் ந்யாஸநிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0-12—0	1—0—0
4. உக்திநிஷ்டாபரணோத்யோதம் (,,)	0—8—0	0-12—0
5. வீக்ஷாரண்யக்ஷேத்ர மாஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் ... (க்ரந்த லிபி)	1—0—0	1—8—0
6. ஸ்ரீ அஹோபில மாஹாத்ம்யம் (,,)	0—8—0	0-12—0
7. ௸ (தெலுங்கு லிபி)	0-12—0	1—0—0
8. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—8—0	0-12—6
9. ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3—0	0—4—0
10. ஸ்ரீ பாஷ்யார்த்த மணிப்ரவாள தீபிகை (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0
11. ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0
12 ஈசாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழிபெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0—0	1—8—0

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள் கீழுள்ள விலாஸத்திற்கு எழுதவும் :—

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 5, ராமஸ்வாமி தெரு, தி. நகர், சென்னை.

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5 Ramaswami Street, Tyagarayanagar, Madras